Registered as a news paper.

பக்கங்கள்: பத்து

விலை: ரூபா 6.00

நமது ஈழநாடு

தமிழர் தாயகத்தின் முன்னோடி நாளிதழ்

உலகெங்குமுள்ள உங்கள் உறவினர்களுடன்
INTER NET
BROWSING CENTRE
ஸ்ரீ முருகன் தொலைத்தொடர்பகம்
இலங்கை முழுவதும் 24 மணிநேரத்தில்
துரித தபால்/பொதிகள் சேவை.
SRI MURUGAN
TELE COMMUNICATION & AGENCY POST OFFICE
303, K.K.S. Road, Jaffna. T.P. 021-2222670, 2223588
Fax - 2223214, Email-del - smskr@eureka.lk

மலர் : 01 திருவள்ளுவர் ஆண்டு: 2034 வைகாசி 05 ஆம் நாள், ஹிஜ்ரி 1425 ர.அவ்வல் 16 (19.05.2003) திங்கட்கிழமை இதழ்: 227

# தென்பகுதியில் கடும் மழை; பெரு வெள்ளம்!

# மண்சரிவில் 100க்கும் அதிகமானோர் பலி!

## சடலங்களைத் தேடி அலையும் உறவினர்கள்

(கொழும்பு)

**தென்பகுதியில் தொடர்ச்சியாகப் பெய்துவரும் மழை காரணமாக, ஏற்பட்ட வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவுகளில் சிக்கி, இதுவரை நூற்றுக்கும் மேற்பட்ட பொதுமக்கள் பலியாகியுள்ளனர். மேலும், நூற்றைம்பதிற்கும் மேற்பட்ட பொதுமக்கள் காணாமற்போயுள்ளனர். இந்த இயற்கைச் சீற்றத்தில் உயிரிழந்தவர்களில் சுமார் 47சடலங்கள் மட்டுமே நேற்றிரவுவரை மீட்கப்பட்டுள்ளன.**

மண்சரிவும் வெள்ளப் பெருக்கும் தொடர்ந்தும் ஏற்பட்டுவருவதாலும் இதுவரை பாதிக்கப்பட்ட பகுதிகளில் முழுமையான மீட்புப்பணிகள் நடைபெறாமையாலும் வெள்ளப் பெருக்கு, மண்சரிவுகளினால் ஏற்பட்ட சேதங்கள் அதிகமாக இருக்கலாமென்று கருதப்படுகிறது.

**அவசரகால நிலை பிரகடனம்**

வெள்ளப்பெருக்கு மற்றும் மண்சரிவு அனர்த்தங்கள் தொடர்ந்தும் நிகழ்ந்துவருவதாலும், பாதிக்கப்பட்ட பகுதிகளில் மீட்புப்பணிகள் நடைபெற்று வருவதாலும் அவசரகால நிலை அரசாங்கத்தால் பிரகடனம் செய்யப்பட்டுள்ளது.

**ஹெலி மூலம் பார்வையிட்டனர்**

பிரதமர் ரணில் விக்கிரமசிங்க தலைமையிலான அமைச்சர்கள் குழுவினர், விமானப் படையினருக்குச் சொந்தமான உலங்கு வானூர்தி மூலம் நேற்றுமாலை பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கு நேரடியாகச் சென்று பார்வையிட்டனர்.

பாதிக்கப்பட்ட பகுதிகளுக்கான போக்குவரத்துக்கள் முற்றாக ஸ்தம்பிதமடைந்து விட்டதால், அப்பகுதிகளிலுள்ள கட்டடங்கள், கூரைகள் மீதும், உயர்ந்த மரங்களிலும் தத்தளித்துக்கொண்டிருந்த பொதுமக்களுக்கு உலங்கு வானூர்திமூலம் உணவுப் பொட்டலங்களை வீசும்

(10ஆம் பக்கம் பார்க்க)



மண் சரிவினால் வீடு ஒன்று அழிந்திருப்பதை படத்தில் காணலாம்.

## வெள்ளப்பெருக்கின் காரணமாக உயர்தரப் பரீட்சை இன்று இல்லை

(கொழும்பு)

தொடர்ச்சியான வெள்ளப் பெருக்கு மற்றும் மழை காரணமாக, க.பொ.த. உயர்தரப் பரீட்சை இன்று நடைபெறமாட்டாது என, கல்வி அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு அறிவித்துள்ளார்.

தென்னிலங்கை மற்றும் மத்திய மலைநாட்டுப் பிரதேசங்களில் தொடர்ந்து மழை பெய்துவருவதனால், இயல்பு வாழ்க்கை பாதிக்கப்பட்டுள்ளது.

இதனை அடுத்து, நடைபெற்று வந்த க.பொ.த. உயர்தரப் பரீட்சை இன்று நடைபெறமாட்டாது என்றும், செவ்வாய்க்கிழமை பரீட்சை நடக்குமா என்பது பற்றி இன்றுகாலை அறிவிக்கப்படும் என்றும் அமைச்சர் கருணாசேன கொடித்துவக்கு தெரிவித்தார். (01)

## உயிருக்குப் போராடும் மக்கள் தொலைபேசி மூலம் அழைப்பு

### செஞ்சிலுவைச்சங்கப் பேச்சாளர்

உயிருக்காகப் போராடும் மக்கயிடமிருந்து தொலைபேசி அழைப்புக்கள் கிடைத்துக்கொண்டிருந்தாலும், அவர்களுக்கு உதவமுடியாத நிலையில் தாம் இருப்பதாக சர்வதேச செஞ்சிலுவைச் சங்கத்தின் பேச்சாளர் ஆனந்த லகம்வம்ச தெரிவித்தார்.

வெள்ளத்தினாலும், மண்சரிவினாலும் பாதிக்கப்பட்டுள்ள மக்களைக் காப்பாற்றுவதே இன்றுள்ள முக்கியமான தேவையாக உள்ளது. இதன் பின்னரே அவர்களுக்கான உதவிகள் பற்றித் தீர்மானிக்க முடியும் என்று அவர் மேலும் தெரிவித்தார்.

## மீளக் குடியமர அனுமதிக்கக்கோரி

## மல்லாகத்தில் புதிய படைமுகாம்; பொதுமக்கள் எதிர்ப்பு ஆர்ப்பாட்டம்

### விண்ணாணம் விநாசியர்



# மீளக் குடியமர அனுமதிக்கக்கோரி கச்சேரி முன்பாக நாளை மறியல்

## வலி - வடக்கு மக்கள் நடாத்த ஏற்பாடு

(யாழ்ப்பாணம்)

வலி. வடக்கில் மக்களின் மீள்குடியமர்வுக்கு அனுமதிக்கும்படி கோரி, யாழ். செயலகத்துக்கு முன்பாக நாளை மாபெரும் மறியற்போராட்டம் நடைபெறவுள்ளது.

வலி. வடக்கிலிருந்து இடம்பெயர்ந்தமக்கள் நூற்றுக்கணக்கில் யாழ்.செயலகத்துக்கு முன்பாக ஒன்றுகூடி மறியற்போராட்டம் செய்யவுள்ளனர்.

நாளைய மறியற்போராட்டம் காரணமாக யாழ். செயலகம் முழுமையாக ஸ்தம்பிதமடையும் என்று எதிர்பார்க்கப்படு (10ஆம் புக்கம் பார்க்க)



ஏ.எல்.சோதனைக்கும் இது சோதனையான காலம் போல...

## இரு மணிநேரம் போக்குவரத்து பாதிப்பு

மல்லாகத்தில் பொதுமக்களின் குடியிருப்புப் பகுதியில் படைமுகாம் அமைப்பதைக் கண்டித்து, மறியற் போராட்டம் ஒன்று நடைபெற்றது.

அளவெட்டி - மல்லாகம் வீதியில் பழைய நீதிமன்றக் கட்டடத்துக்கு முன்பாக, மேற்படி மறியற் போராட்டம் நேற்றுக் காலை 9.00 மணியளவில் ஆரம்பமாகியது.

அளவெட்டி - மல்லாகம் வீதியில் பழைய நீதிமன்றத்துக்கு முன்பாக வீதித் தடைகளைப் போட்டும், எதிர்ப்பு சுலோக அட்டைகளை ஏந்தியவாறும், பெருமளவு மக்கள் மறியற்போரில் ஈடுபட்டனர். இதனால், அவ்வீதியில் போக்குவரத்து இரண்டு மணித்தியாலங்கள்வரை தடைப்பட்டது.

இதையடுத்து, அங்கிருந்த இராணுவத்தினர் தமது தலைமையகத்துடன் தொடர்புகொண்ட பின்னர், உயர் இராணுவ அதிகாரி வந்து சாதகமான பதில் தருவதாக உறுதியளித்ததையடுத்து, மக்கள் வீதித் தடைகளை அகற்றிப் போக்குவரத்துக்கு அனுமதித்தனர். (101,9)

# புலிகளின் நிலைப்பாட்டை விளக்கும் அறிக்கை விரைவில் வெளியாகும்

(கொழும்பு)

நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசன் விடுதலைப்புலிகளுடன் நடத்திய பேச்சுக்கள் தொடர்பாக - விடுதலைப் புலிகள் இன்று அல்லது நாளை அறிக்கை ஒன்றை விடுக்கலாம் என எதிர்பார்க்கப்படுகிறது.

புலிகள் தமது நிலைப்பாட்டை விளக்கி இந்த அறிக்கையை வெளியிடவுள்ளதாகத் தகவல்கள் தெரிவிக்கின்றன.

இதேவேளை, நோர்வே பிரதி வெளிவிவகார அமைச்சர் விதார் ஹெல்கிசனை அமைச்சர் மிலிந்த மொறகொட, அமைச்சர் ஜி.எல். பீரிஸ் ஆகியோர் நேற்றுச் சந்தித்துப் பேச்சு நடத்தினர்.

நீண்ட நேரம் நடத்தப்பட்ட இந்தப் பேச்சுக்கள் தொடர்பான முடிவுகள் எதுவும் அறிவிக்கப்படவில்லை.

இதேவேளை, விதார் ஹெல்கி'சன் இன்று வன்னிக்குச் சென்று (10ஆம் பக்கம் பார்க்க)

# ஐந்தாவது நாளாகத் தொடர்கிறது களுத்துறைக் கைதிகள் போராட்டம்!

## ஒரு கைதி மயக்கநிலையில்

(கொழும்பு)

களுத்துறைச் சிறைக்கைதிகள்- தம்மை விடுதலை செய்யக்கோரியும், தம்மைச் சொந்த இடங்களிலுள்ள சிறைச்சாலைக்கு இடமாற்றக் கோரியும் நேற்று ஐந்தாவது நாளாக உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டிருந்தனர்.

இவர்களில் ஒருவர் மயக்கமடைந்துள்ளதாகவும், இவர் மருத்துவ வசதிகளை ஏற்க மறுப்புத் தெரிவித்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

தொடர்ச்சியான உண்ணாவிரதப் போராட்டத்தில் ஈடுபட்டுள்ளமையால், (10 ஆம் பக்கம் பார்க்க)

EXPO Aviation
எக்ஸ்போ
இலங்கையில் முன்னணி வகிக்கும் உள்ளூர் விமான சேவை....
ஒதுக்கீடுகளுக்கு அழையுங்கள் 021 ~ 2223891 071 349999
071 348888 074 ~ 512666 ~ 01 ~ 360290

# தமிழ் மண்ணை மீட்கப் போராட்டம்; இதைத்தவிர வேறுவழி எமக்கில்லை!

## நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா

பேரினவாத சக்திகளினதும் ஆக்கிரமிப்பு, அடக்குமுறை நடவடிக்கைகளுக்கு எதிராகவும், தமிழ் மண்ணை மீட்கவும் மக்கள் போராட்டங்களை நடத்துவதைத் தவிர வேறுவழியில்லை என்று மாவை சேனாதிராஜா வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

வலி - வடக்கு மக்களின் மண் மீட்புப் போராட்டத்திற்கு ஆதரவு வழங்குமாறு கோரி, தமிழ்த் தேசியக் கூட்டமைப்பின் நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராஜா வெளியிட்டுள்ள அறிக்கையில் மேலும் குறிப்பிட்டுள்ளதாவது:

15 ஆண்டுகளுக்கு மேலாக தம் சொந்த மண்ணிலிருந்து, வீடுவாசல்களில் இருந்து, சிங்கள தேசத்து இராணுவத்தினால் துரத்தப்பட்ட மக்கள், அகதிகளாகவும் அநாதரவாகவும் அலைந்து திரிகின்றனர்.

நல்ல வளமுள்ள வேளாண்மை, கடற்தொழில், சீமெந்து உற்பத்தி முதலான தொழிற்துறைகள், வியர்வைசிந்தி உழைக்கும் திறன் கொண்ட மனிதவளம் எல்லாவற்றையும் இழந்து, சொந்த மண்ணை விட்டு முகாம்களிலும், தெருவோரங்களிலும் பட்டினி வாழ்க்கை எத்தனை ஆண்டுகள் தொடர்வது என்று இதயம் பொங்கிப் போராடுகின்றது.

ஆதிக்க வெறிகொண்ட சிங்களப் பேரினவாத ஆக்கிரமிப்பு இராணுவம், மேலும் அதியுயர் பாதுகாப்பு வலயங்களையும், புதிய இராணுவ முகாம்களையும் நிறுவ முயற்சிக்கின்றது.

தமிழீழ விடுதலைப் புலிகளும்- இலங்கை அரசும் கையெழுத்திட்ட புரிந்துணர்வு உடன்படிக்கையின்படி 15 மாதங்கள் கடந்த பின்னும், தமிழ்த் தேசத்தில் - மக்களிடத்தில் இயல்புவாழ்க்கை ஏற்படவில்லை.

பேரினவாத அரசியல் சக்திகளின் நெருக்குதலுக்குள்ளாகி வரும் அரசு துணிவுடன் உயர்பாதுகாப்பு வலயங்களை நீக்கிவிட்டு சொந்த மண்ணில் மக்களை மீளக் குடியமர நடவடிக்கை எடுக்க வேண்டும்.

சர்வதேச அரங்குவரைக்கும் சென்றுவிட்ட தமிழ்த்தேச இனப் பிரச்சினையின் முக்கிய அம்சமாகிவிட்ட உயர்பாதுகாப்பு வலயமும், மக்கள் மீளக்குடியமர்வும் ஒரு தீர்வை நோக்கி முன்னெடுக்கப்பட வேண்டியது அவசியமாகிவிட்டது.

இதேவேளை, நம் தமிழ்க்குமக்கள் அனைவரும் ஒன்றுதிரண்டு, அமைதியான முறையில் வலி - வடக்கு உட்பட அனைத்து ஆக்கிரமிப்புக்கு எதிராகவும், தமிழ் மண்ணை மீட்டு மீளக்குடியமர்வதற்கு ஆதரவாகவும் நடைபெறுகின்ற மறியற் போராட்டம் மற்றும் பேரணியில் பங்குகொள்ளுமாறும் அழைக்கின்றேன் எனத் தெரிவிக்கப்பட்டுள்ளது.

# மரவள்ளிக்கிழங்குத் திருட்டுக்கள் இணுவில் பகுதியில் அதிகரிப்பு

இணுவில், மருதனாமடம் ஆகிய பகுதிகளில் உள்ள தோட்டங்களிலிருந்து மரவள்ளிக் கிழங்குகள் திருடப்பட்டுவருகின்றன.

தற்போது மரவள்ளிக் கிழங்கின் விலை அதிகரித்துள்ள நிலையில் தோட்டங்களிலிருந்து இரவிரவாகக் கிழங்குகள் திருடப்படுவது அதிகரித்துள்ளது.

இதனால், விவசாயிகள் பெரும் நெருக்கடிகளை எதிர்நோக்கியுள்ளனர். தமது தோட்டங்களில் உள்ள மரவள்ளிக் கிழங்குகளைப் பாதுகாக்க, இரவிரவாக விழித்திருந்து காவல் காக்க வேண்டிய நிலையில் இருப்பதாக, அப்பகுதி விவசாயிகள் தெரிவித்தனர். (82)

# மருதனார்மடம் சந்தையில் விவசாயிகளுக்கு நஷ்டம்

மருதனார்மடம் சந்தையில் மரக்கறிகளைச் சந்தைப்படுத்த வரும் விவசாயிகள் பெரும் நஷ்டங்களை எதிர்நோக்கி வருவதாகத் தெரியவருகின்றது.

மரக்கறிகளைச் சந்தைப்படுத்த வரும் விவசாயிகளிடம் விலைக் கழிவுகளை வியாபாரிகள் அதிகரித்து வருகின்றனர்.

இதனால், விவசாயிகள் பெரும் நஷ்டங்களை எதிர்நோக்கியிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது. தாம் மிகுந்த கஷ்டப்பட்டு விளைவித்த மரக்கறிகளைக் குறைந்த விலைக்கே சந்தைப்படுத்தக் கூடியதாகவுள்ள சூழ்நிலையில், வியாபாரிகள் விலைக் கழிவுகளை அதிகரிப்பதால், தமக்கு அதிக நஷ்டம் ஏற்படுவதாக விவசாயிகள் மேலும் குறிப்பிட்டுள்ளனர். (82)

# இராணுவ காவலரண் மீது மோதிய பஜிரோ வாகனம்

(யாழ்ப்பாணம்)

வேகமாகச் சென்ற பஜிரோ வாகனம் ஒன்று கட்டுப்பாடை இழந்து இராணுவ காவலரண் மீது மோதியது. இந்தச் சம்பவம் நேற்றுக் காலை யாழ். நல்லூர் கோவில் வீதியில் இடம்பெற்றது.

கோவில் வீதிப் பகுதியில் அமைந்துள்ள இராணுவ முகாமின் காவலரண் மீதே - பஜிரோ வாகனம் மோதியது. இதனால், இராணுவக் காவலரணும், இராணுவ முகாமின் சுற்றுமதிலின் ஒரு பகுதியும் சேதமுற்றது குறிப்பிடத்தக்கது.

## புயல் மற்றும் மழையால்

# பூநகரி கடற்தொழிலாளருக்கு முப்பது லட்சம் ரூபா நஷ்டம்

(யாழ்ப்பாணம்)

கடந்த சில தினங்களாக வீசிய கடும்புயல் மற்றும் மழை காரணமாக பூநகரி பிரதேச செயலர் பிரிவில் 192 மீனவர்களின் 30 இலட்சம் ரூபா பெறுமதியான கடற்தொழில் உபகரணங்கள் சேதமடைந்துள்ளது.

பூநகரி - பள்ளிக்குடா கடற்தொழிலாளர் சங்கம் சேகரித்த தகவல்களிலிருந்து இது தெரியவந்துள்ளது.

பூநகரி பிரதேச செயலர் பிரிவில் கடற்தொழிலில் ஈடுபடும் மீனவர்களுடைய படகுகள், வலைகள் ஆகியன கடும்புயல் மற்றும் மழை காரணமாக சேதமடைந்தன. அத்துடன் மீனவர்களின் குடிசைகளும் பாதிப்படைந்துள்ளன.

# அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் அபிவிருத்தி வேலைகள் தடைப்படுகின்றது

## அமைச்சர் மகேஸ்வரன் குற்றச்சாட்டு

அபிவிருத்தித் திட்ட நடவடிக்கைகளில் இளைஞர்களை ஈடுபடுத்திப் போரினால் பாதிக்கப்பட்ட யாழ். மாவட்ட பிரதேசங்களை துரிதமாக புனரமைக்க வேண்டியுள்ளது.

இதற்கு ஆர்வமும் துடிப்பும் உள்ள இளைஞர்கள் முன்வரவேண்டும்.

- இவ்வாறு காரைநகர் கலாநிதி ஆ.தியாகராசா மத்திய மகா வித்தியாலய ஸ்தாபகர் தினத்திலும், பரிசளிப்பு விழாவிலும் பிரதம அதிதியாகக் கலந்துகொண்டு உரை நிகழ்த்திய, இந்து விவகார அமைச்சர் தி.மகேஸ்வரன் குறிப்பிட்டார்.

கல்லூரி அதிபர் மு.க.வேலாயுதபிள்ளை தலைமையில் நடராசா ஞாபகார்த்த மண்டபத்தில் நடைபெற்ற இவ்வைபவத்தில், அமைச்சர் மகேஸ்வரன் தொடர்ந்து உரையாற்றுகையில்,

அதிகாரிகளின் அசமந்தப் போக்கினால் அபிவிருத்தி வேலைகள் தடைப்படுகின்றன. அரசாங்க, கூட்டுறவு, திணைக்களங்களில் பலவற்றிலும் கடமையாற்றுகின்ற வயது முதிர்ந்த அதிகாரிகள் துரிதமாகச் செயற்படாததால், அரச நிதியைப் பயன்படுத்தி மேற்கொள்ளக்கூடிய அபிவிருத்தித்திட்ட வேலைகளைப் பூரணப்படுத்த முடியாதுள்ளது.

காரைநகர் பலநோக்குக் கூட்டுறவுச் சங்கத்தின் புதிய கட்டடத்துக்கு பத்து இலட்ச ரூபா நிதி ஒதுக்கீடு செய்து வழங்கியும், அக்கட்டட வேலைகள் மிகவும் மந்தகதியிலேயே நடைபெற்று வருகின்றன. அர்ப்பணிப்புடன் சேவையாற்றக்கூடிய அதிகாரிகளை இன்று அலுவலகங்களில் காணமுடிவதில்லை.

ஜனாதிபதி தன்னிடம் உள்ள அதிகாரத்தைப் பயன்படுத்தி ஓர் இரவிலேயே நாடாளுமன்றத்தைக் கலைத்துவிட முடியும். எனவே, யாழ். மாவட்டத்தில் அரச நிதியைப் பயன்படுத்திச் செய்யக்கூடிய அபிவிருத்தி வேலைகளை விரைவாகச் செய்து முடிக்கவேண்டும். இதற்குத் துடிப்பும் ஆர்வமுமிக்க இளைஞர்கள் முன்வரவேண்டும் என்றார்.

காரைநகர் உதவி அரசாங்க அதிபர் வே.சாம்பசிவம், தீவக வலய பிரதிக் கல்விப்பணிப்பாளர் ஜீ.வி.இராதாகிருஷ்ணன், காரைநகர் அரசினர் வைத்தியசாலை வைத்திய பொறுப்பதிகாரி திருமதி எஸ்.கனகசபை, காரைநகர் கம்பன்கழக அமைப்பாளர் தமிழருவி த.சிவகுமாரன் ஆகியோரும் உரை நிகழ்த்தினர்.

# அரசியல்வாதிகளால் சீரழியும் தோட்டத் தொழிலாளரின் பலம்!

## மலையக மக்கள் முன்னணித் தலைவர் சிவலிங்கம்

உலக நாடுகளில் தொழிற்சங்கங்கள் என்றாலேயே ஆளும் அரசாங்கங்கள் அச்சமடையும்போது - இங்கோ, இங்குள்ள அரசியல்வாதிகளின் செயற்பாடுகளால் தொழிலாளர்களின் பலமே சிதைக்கப்படுகிறது. மலையகத்திலுள்ள தலைமையகங்கள் ஆளுங்கட்சியுடன் பணியாற்ற விரும்புகின்றனவே தவிர, வட - கிழக்கில் வாழும் தமிழர்களோ, முஸ்லிம்களோ அனுபவிக்கும் கௌரவத்தையும் அதிகாரத்தையும் - தோட்டத் தொழிலாளர்களுக்குப் பெற்றுத்தரவில்லை என - மலையக மக்கள் முன்னணியின் தலைவர் எம்சிவலிங்கம் தெரிவித்தார்.

நாகலை பகுதியில் தொழிற்சங்கக் கட்டடமொன்றைத் திறந்து வைத்து உரையாற்றியபோதே அவர் இதனைக் கூறினார்.

அங்கு அவர் தொடர்ந்தும் பேசும்போது -

இன்று, மலைநாட்டிலுள்ள தொழிற்சங்கவாதிகள், தம்மை அரசியல்வாதிகளாக மாற்றிக்கொள்ளவே தலைப்படுகின்றனர். இதுதான் மலையகத்தின் வலிமையைச் சிதைக்கிறது.

இலங்கையை ஆளும் அரசாங்கங்கள், மலையகத் தமிழர்களைத் தேயிலைத் தோட்டங்களுக்குள்ளும், இறப்பர் தோட்டங்களுக்குள்ளும் அடைத்து வைத்திருப்பதை நோக்கமாகக் கொண்டுள்ளன.

மலையகத்திலுள்ள அரசியற்கட்சிகள், சுயமாகத் தமது சொந்தக் கட்சிகளில் நிற்கவேண்டும். தொழிற்சங்க கட்சிகளுடன் இனிக் கூட்டுச் சேர்வதைப்பற்றி இவை மறுபரிசீலிக்க வேண்டும் எனக்கூறினார்.

## உயர்பாதுகாப்பு வலயத்தால்

# மூடப்பட்டிருக்கும் ஆறு பாடசாலைகள்

தென்மராட்சியில் அதியுயர் பாதுகாப்பு வலயத்துக்குட்பட்ட பிரதேசத்தில் அமைந்திருக்கும் ஆறு பாடசாலைகளை இயங்கவைக்க முடியாத நிலை நிலவுவதாகத் தெரியவருகிறது.

மக்கள் குடியேற அனுமதிக்கப்படாத பிரதேசத்தில் அமைந்த பாடசாலைகளே இவ்வாறு மூடப்பட்டிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

எழுதுமட்டுவாள் சிறிகணேச வித்தியாலயம், எழுதுமட்டுவாள் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, ஒட்டுவெளி அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, கரம்பொன் அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, தனங்கிளப்பு அரசினர் தமிழ்க்கலவன் பாடசாலை, மறவன்புலோ சகலகலாவல்லி வித்தியாலயம் என்பனவே உயர்பாதுகாப்பு வலயங்களால் இயங்கவைக்கமுடியாமல் மூடப்பட்ட நிலையில் இருப்பதாகத் தெரியவருகிறது.

# உளநெருக்கீட்டுக்குள்ளானோரை கையாள்வதற்கான பயிற்சிநெறி

உளநெருக்கீடுகளுக்கு உள்ளான பிள்ளைகளை கையாள்வதற்கான பயிற்சிகளை ஜீ.ரி.இசற் நிறுவனம் வழங்க முன்வந்துள்ளது.

இதற்காகத் தெரிவு செய்யப்படும் ஆசிரியர்களுக்கான பயிற்சிகள் ஜுன் மாதம் 9 ஆம் திகதி தொடக்கம், சாந்திகம் உளவளநிலையத்தில் நடைபெறவுள்ளது.

இப்பயிற்சிக்கான ஆசிரியர்களை, தெரிவு செய்வதற்கான பொது உளச்சார்புப் பரீட்சை எதிர்வரும் 24 ஆம் திகதி காலை 10.00 மணிக்கு கல்வி வலயங்களில் நடைபெறவுள்ளது.

சாவகச்சேரி, வடமராட்சி, தீவகம், யாழ்ப்பாணம், மடு, மன்னார் மூதூர், திருமலை ஆகிய வலயங்களில் பரீட்சை நடைபெறவுள்ளது. (122)

## மாணவர் ஒன்றியத் தேர்தல்

யாழ்ப்பாண உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியத் தேர்தல் இன்று நடைபெறவுள்ளது. மாணவர் ஒன்றியத் தேர்தலில் வாக்களிக்க வரும் - வாக்காளர்கள் தகுதியுள்ள மாணவர்கள், தமது அடையாளத்தை உறுதிப்படுத்தக்கூடிய வகையில் - அடையாள அட்டையுடன் சமுகமளிக்குமாறு உயர் தொழில்நுட்ப நிறுவன மாணவர் ஒன்றியச் செயலாளர் அறிவித்துள்ளார்.

# இளஞர், யுவதிகள் மீது முகமாலையில் விசாரணை

கடந்த சில தினங்களாக வன்னியிலிருந்து யாழ்ப்பாணத்திற்கு வரும் பொதுமக்கள் மீது - பொதுவாக இளைஞர்கள் மீதும், யுவதிகள் மீதும், இராணுவத்தினர் - சோதனைச் சாவடிக் கூட்டிற்குள் அரை மணித்தியாலத்திற்கும் மேல் தடுத்து வைத்து விசாரணைகளை நடத்துகின்றனர்.

இங்குள்ள படையினர் - விசேட அடையாள அட்டையின்றி வருவோரை பல மணிநேரம் மறித்து, எல்லைப் படையில் பயிற்சி பெற்றீர்களா? விடுதலைப் புலிகளின் உளவுப்பிரிவினரா? எனத் தமிழில் விசாரித்து வருகின்றனர்.

இதனால், பல வருடங்களின் பின், யாழ்ப்பாணத்திலிருக்கும் தமது உறவுகளைக் காணும் விருப்புடன் வரத்துணியும் இளைஞர், யுவதிகள் இராணுவத்தினரின் இந்த கெடுபிடிகளால், யாழ்ப்பாணத்திற்கு வரத் தயங்குவதாகத் தெரியவருகின்றது.

திருச்செந்தில் சங்கானை
ரஜனி, ரம்பா, சௌந்தர்யா
அருணாசலம்
காட்சி நேரம் 11.00, 2.45, 6.00 (பு.ப)
வெள்ளி, சனி, ஞாயிறு (இரவு 8.45)
HANNIBAL

ராஜா யாழ்ப்பாணம்.

புதிய கீதை
10.30, 2.30, 6.30, 9.30

# உடனடி மருத்துவ தேவைக்காக கேணல் பால்ராஜ் சிங்கப்பூருக்கு



தமிழீழ விடுதலைப் புலிகளின் மூத்த தளபதி கேணல் பால்ராஜ் உடனடி மருத்துவ தேவைக்காக சிங்கப்பூருக்குச் சென்றிருப்பதாகக் கட்டுநாயக்க விமானநிலைய வட்டாரங்கள் தெரிவித்தன.

கேணல் பால்ராஜ் இருதய நோயினால் பாதிக்கப்பட்டிருப்பதாகவும், இதற்கான சிகிச்சைகளைப் பெற்றுக் கொள்வதற்காகவே அவர் சிங்கப்பூர் சென்றதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

கடந்த புதன்கிழமை வன்னியிலிருந்து ஹெலிகொப்டர் மூலம் கொழும்பு வந்த கேணல் பால்ராஜ், கட்டுநாயக்க விமான நிலையத்திலிலுள்ள, 'எயர்போட் கார்டன்' ஹோட்டலில் தங்கியிருந்தார்.

கடவுச் சீட்டுப் பெற்றுக்கொண்ட பின்னர் - இவர் கடந்த வியாழக்கிழமை சிங்கப்பூர் எயர் லைன்ஸ் விமானம் மூலம் சிங்கப்பூருக்குப் புறப்பட்டுச் சென்றார்.

இவருக்குச் சிங்கப்பூரில் இருதய அறுவைச் சிகிச்சை மேற்கொள்ளப்படலாம் எனக் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.

## மரங்கள் சரிவுக்கு பாராமரிப்புக் குறைபாடே காரணம்

(கொழும்பு)

கொழும்பு நகரிலுள்ள வீதியோர மரங்கள் அண்மைக் காலமாகச் சரிந்து வீழ்வதற்கு இயற்கை காரணமல்ல என்றும், மாநகரசபையின் போதிய பராமரிப்பின்மையே காரணம் என்றும் பொதுமக்கள் தரப்பில் குற்றச்சாட்டுக்கள் கிளம்பியுள்ளன.

வீதியோர மரங்களைக் கொழும்பு மாநகர சபையே பராமரித்து வருகின்றது. மரங்களின் பராமரிப்புக் குறைபாட்டினாலேயே அண்மைக் காலத்தில் அதிகளவு மரங்கள் வேரோடு சாய்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடும்மழை, காற்று என்பவற்றால் தான் மரங்கள் சாய்ந்து வீழ்ந்ததாகக கூறப்படுவது உண்மையல்ல என்று பொதுமக்கள் தரப்பில் தெரிவிக்கப்படுகிறது. கடந்த 12 ஆம் திகதி மட்டும் கொழும்பு நகர வீதிகளில் நடப்பட்டிருந்த 120 மரங்கள் சரிந்து வீழ்ந்ததாகத் தெரிவிக்கப்படுகிறது.

# தலைவர் பிரபாவின் மீசைக்கு ஊடகங்கள் முக்கியத்துவம்!

(கொழும்பு)

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் மீண்டும் மீசை வளர்க்கத் தொடங்கியமை குறித்து, கொழும்பு ஊடகங்கள் முக்கியத்துவம் கொடுத்து செய்திகளை வெளியிடுகின்றன.



அண்மையில் ஜப்பானின் விசேட சமாதானத் தூதுவர் யசூஷி அகாஷியைப் புலிகளின் தலைவர் வே.பிரபாகரன் சந்தித்த புகைப் படங்கள் வெளியாகியிருந்தன.

இந்தப் புகைப்படங்களில் புலிகளின் தலைவர் பிரபாகரன் தனக்கே உரித்தான 'ட்ரேட் மார்க்' கான அகன்ற மீசையுடன் காணப்படுவதாகக் கொழும்பு வட்டாரங்களில் பேசப்படுவதாகவும்,

இது அவர் தனது போராளிகளுக்குக் விடுக்கும் சமிக்ஞை என்றும் 'கொழும்பு பேஜ்' என்ற இணையத்தளம் செய்தி வெளியிட்டுள்ளது.

# ஜனாதிபதி சந்திரிகாவின் பாதுகாப்பை அதிகரிப்பதற்கு அரசாங்கம் நடவடிக்கை

## பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் தெரிவிப்பு



ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் பாதுகாப்பை அதிகரிக்க அரசாங்கம் தீர்மானித்துள்ளதாகப் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ தெரிவித்தார்.

ஜனாதிபதி சந்திரிகாவுக்கான பாதுகாப்பை அதிகரிப்பதற்கான தீர்மானம் முன்னரே எடுக்கப்பட்டது. இந்தச் சிபார்சில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன கையெழுத்திடத் தாமதம் ஏற்பட்டதாலேயே பாதுகாப்பு அதிகரிக்கப்படவில்லை.

விரைவில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன இந்த உத்தரவில் கையெழுத்திட்டதும், ஜனாதிபதி சந்திரிகாவுக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்படும்.

கடந்த மாத இறுதியில் தமது பாதுகாப்பை அதிகரிக்குமாறு ஜனாதிபதி சந்திரிகா கேட்டிருந்தார். இதனையடுத்தே, புதிய பாதுகாப்புத் திட்டங்கள் உருவாக்கப்பட்டன.

இந்தப் புதிய பாதுகாப்புத் திட்டத்தில் பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பன சில வேலைப்பழுக்கள் காரணமாக ஒப்பமிடத் தாமதமாகியுள்ளது.

விரைவில் பாதுகாப்பு அமைச்சர் இந்த சிபார்சில் ஒப்பமிடுவார்.

அத்துடன், ஜனாதிபதி மாளிகையில் பாதுகாப்பை அதிகரிக்க அப்பகுதியை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்துமாறு ஜனாதிபதியின் முன்னாள் செயலாளர் குசும்சிறி பாலபெத்தபெண்டி கேட்டிருந்தார்.

இதனடிப்படையில் விரைவில் ஜனாதிபதி மாவத்தை உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யப்படவுள்ளது. இதற்கான வர்த்தமானி அறிவித்தல் விரைவில் வெளியிடப்படும்.

அத்துடன், கொழும்புத்துறைமுகத்தின் சில பகுதிகளும் உயர்பாதுகாப்பு வலயமாகப் பிரகடனப்படுத்தப்படவுள்ளது. கலதாரி ஹோட்டல் வரை உயர் பாதுகாப்பு வலயம்



நீடிக்கப்படவுள்ளது. ஜனாதிபதி மாளிகையின் பாதுகாப்பைப் பலப்படுத்தவே இந்த நடவடிக்கையாகும்.

காலி முகத்திடலையும் உயர் பாதுகாப்பு வலயமாகப் பிரகடனம் செய்யுமாறு ஜனாதிபதி கேட்டிருந்தார் என்றும் பாதுகாப்பு அமைச்சின் செயலாளர் ஒஸ்ரின் பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார்.

இதேவேளை, ஜனாதிபதி சந்திரிகாவின் ஆலோசகர் லக்ஷ்மன் கதிர்காமரின் பாதுகாப்பைக் குறைக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளதாக வெளிவந்த செய்திகளையும் ஒஸ்ரின் பெர்னாண்டோ நிராகரித்தார்.

கதிர்காமருக்கான பாதுகாப்பு அதிகரிக்கப்பட்டுள்ளதே தவிர குறைக்கப்படமாட்டாது. கதிர்காமருக்கான பாதுகாப்புக்கு ஐந்து மில்லியன் ரூபாவை வரவு செலவு சிபார்சுகளினுடாக ஒதுக்க அரசாங்கம் திட்டமிட்டுள்ளது.

கதிர்காமருக்கான வாகனங்கள், அவரது பாதுகாப்பு வாகனங்கள் மெய்ப்பாதுகாவலர்களுக்காகவே இந்த நிதி செலவிடப்பட்வுள்ளதாகவும் ஒஸ்ரின் பெர்னாண்டோ மேலும் தெரிவித்தார்.

## கட்சி உறுப்பினர் பாதுகாப்பை அதிகரிக்க ஈ.பி.டி.பி. கோரிக்கை

(கொழும்பு)

தமது கட்சி உறுப்பினர்களுக்கான பாதுகாப்பை அதிகரிக்குமாறு ஈ.பி.டி.பி- அரசாங்கத்திடம் வேண்டுகோள் விடுத்திருக்கின்றது. இது தொடர்பாகக் கொழும்பு ஊடகம் ஒன்றுக்கு ஈ.பி.டி.பி முக்கியஸ்தர் ஒருவர் தகவல் வெளியிட்டபோது-

தமது உறுப்பினர்கள் புலிகளால் தொடர்ச்சியாகக் கொல்லப்படும் நிலையில், அரசாங்கம் கட்சி உறுப்பினர்களுக்குத் தகுந்த பாதுகாப்பை வழங்க நடவடிக்கை எடுக்கவில்லை.

கட்சி உறுப்பினர்களுக்குப் பாதுகாப்பை அதிகரிக்குமாறு அண்மையில் கொழும்பு வந்திருந்த அமெரிக்காவின் தெற்காசியப் பிராந்திய விவகார அமைச்சர் கிறிஸ்ரினா ரொக்காவிடம் - ஈ.பி.டி.பி. நேரடியாக வேண்டுகோள் விடுத்திருந்தது.

ஆனால், அரசாங்கம் எந்த நடவடிக்கையும் எடுக்கவில்லை என்றும் தெரிவித்தார்.

## ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம்

(வடமராட்சி)

பருத்தித்துறை பிரதேச செயலகத்தின் ஒருங்கிணைப்புக் குழுக் கூட்டம், எதிர்வரும் 27 ஆம் திகதி காலை 10 மணிக்குப் பிரதேச செயலக மாநாட்டு மண்டபத்தில் நடைபெறவுள்ளது.

அனைத்துத் திணைக்கள அதிகாரிகளையும் இக்கூட்டத்தில் தவறாது கலந்து கொள்ளுமாறு பிரதேச செயலர் சிவசாமி தெரிவித்துள்ளார்.

## இளங்கதிர் கழக உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி

(தொண்டமனாறு)

இளங்கதிர் இளைஞர் விளையாட்டுக் கழகத்தால் நடாத்தப்படும் 9 பேர் கொண்ட உதைபந்தாட்டச் சுற்றுப்போட்டி, கடந்த 10 ஆம் திகதி ஆரம்பமாகித் தொடர்ந்து நடைபெற்று வருகின்றது.

இளங்கதிர் இளைஞர் விளையாட்டுக்கழகத்தில் இருந்து நாட்டுக்காக உயிர் நீத்த மாவீரர்களின் நினைவாகவே மேற்படி போட்டிகள் நடாத்தப்பட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (107)

## கொழும்புத்துறைமுகத்துக்கு

# சந்தேகிக்கத்தக்க நோயாளியுடன் வந்த கப்பல் வெளியேற்றப்பட்டது!

கொழும்புத்துறைமுகத்துக்கு 'சார்ஸ்' நோய் தொற்றியிருக்கலாம எனச் சந்தேகிக்கப்பட்ட மாலுமியுடன வந்த மலேசியக் கப்பல் உடனடியாக அங்கிருந்து வெளியேற்றப்பட்டது.

கடந்த வியாழக்கிழமை மலேசியாவிலிருந்து வந்த கப்பல் ஒன்று கொழும்புத்துறைமுகத்தின் தென்னாசிய நுழைவாயிலூடாக உட்பிரவேசித்திருந்தது.

இந்தக் கப்பலின் கப்டன்- தனது மாலுமிகளில் ஒருவர் சுகவீனமுற்றிருப்பதாகவும், அவருக்குச் சிகிச்சை வழங்க உதவி செய்யுமாறும் துறைமுக அபிவிருத்தி அதிகாரசபையின் அதிகாரிகளிடம் கேட்டிருந்தார்.

இதையடுத்து, துறைமுக அதிகாரசபை அதிகாரிகள் கப்பலுக்குச் சென்று, குறிப்பிட்ட நோயாளியை அவதானித்துவிட்டு, சுகாதார அதிகாரி மூலம் அவரைப் பரிசோதித்தனர். இதன்போது குறிப்பிட்ட மாலுமி வைரஸ் காய்ச்சலால் பீடிக்கப்பட்டிருந்தது தெரியவந்தது.

இந்த மாலுமிக்கு 'சார்ஸ்' நோய் தொற்றியிருப்பது உறுதிசெய்யப்படவில்லையாயினும், மற்றைய கப்பல்களின் மாலுமிகளின் பாதுகாப்புக் கருதிக் கொழும்புத் துறைமுகத்திலிருந்து உடனடியாக வெளியேறுமாறு மலேசியக் கப்பலுக்குத் துறைமுக அதிகாரசபை உத்தரவிட்டது.

# வேலையில்லாப் பிரச்சினையை சமாளிக்க ஈராக்கின் உதவியை நாடும் இலங்கை

(கொழும்பு)

இலங்கையில் நிலவும் வேலையில்லாப் பிரச்சினையைச் சமாளிக்க அரசாங்கம் ஈராக்கிய அரசாங்கத்தின் உதவியை நாடியிருக்கிறது.

போரினால் சீரழிக்கப்பட்டிருக்கும் ஈராக்கில் புனர்நிர்மாணப் பணிகளில் ஈடுபடுத்தப்படுவதற்கு ஏராளமான தொழிலாளர்கள் தேவைப்படுகின்றனர். இதனால் இலங்கையிலிருந்து ஈராக்கிற்குத் தொழிலாளீர்களை அனுப்பி வைப்பதற்கு ஏற்ற நடவடிக்கைகளை தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க எடுத்துள்ளார்.

இதற்காக அவர், ஈராக்கின் இடைக்கால அரச அதிகாரியுடன் தொடர்பு கொண்டுள்ளதாகத் தெரியவருகிறது. இந்தப்பேச்சுக்களின் அடிப்படையில் ஈராக்கில் இலங்கையருக்கு அதிகளவிலான வேலை வாய்ப்புக்கள் கிடைக்க வாய்ப்புக்கள் ஏற்பட்டிருப்பதாகத் தெரியவருகிறது.

இதேவேளை, வேலைவாய்ப்புப் பெற்றுச் செல்லும் இலங்கையருக்கு வெளிநாடுகளில் வைத்தே பயிற்சியளிக்கும் திட்டங்கள் நடைமுறைப்படுத்தவும் அரசாங்கம் தீர்மானித்துள்ளது.

லெபனான், சைப்ரஸ், சவூதி அரேபியா ஆகிய நாடுகளில் முதற்கட்டமாகத் தொழிற்பயிற்சி நிலையங்கள் வீரைவில் திறக்கப்படவுள்ளதாகவும், தொழில் அமைச்சர் மகிந்த சமரசிங்க தெரிவித்தார்.

## இராணுவ உளவாளி படுகொலை தொடர்பாக

# முன்னாள் புளொட் உறுப்பினர் மட்டக்களப்பில் கைதானார்!

(கொழும்பு)

கொழும்பு - தெஹிவளையில் அண்மையில் இராணுவப் புலனாய்வு உறுப்பினர் இனந்தெரியாதவர்களால் சுட்டுக்கொல்லப்பட்ட சம்பவத்தையடுத்து, தீவிர விசாரணைகள் நடைபெறுகின்றன. இந்தப்படுகொலை குறித்து விசாரணைகளை நடத்தி வரும் புலனாய்வுப் பிரிவினர் மட்டக்களப்பைச் சேர்ந்த ஒருவரைச் சந்தேகத்தின் பேரில் கைது செய்து கொழும்புக்குக் கொண்டு சென்றுள்ளனர். இந்தச் சம்பவம் கடந்த 11 ஆம் திகதி இடம்பெற்றது.

கைது செய்யப்பட்டவர் மட்டக்களப்பு - வவுணதீவுப் பிரதேசசபையின் முன்னாள் உறுப்பினரும், புளொட் அமைப்பின் முன்னாள் உறுப்பினருமான வேலாயுதம் எனத் தெரியவருகிறது. இவர் புளியந்தீவில் வசித்து வந்ததாகவும், கடந்த ஆறு தினங்களாகக் காணாமற் போயுள்ளார் எனவும் உறவினர்களால் தெரிவிக்கப்பட்டது. இதேவேளை - தெஹிவளையில் சுடப்பட்ட இராணுவப் புலனாய்வு உறுப்பினர் மட்டக்களப்பு கொக்கட்டிச்சோலையைச் சேர்ந்தவர் என்பது குறிப்பிடத்தக்கது.

## கடற்பிரச்சினைகள் சம்பந்தமான சிபார்சுகளுடன்

# இந்திய கடற்படையதிகாரி அடுத்த மாதம் வருகிறார்!

(கொழும்பு)

கடற்போக்குவரத்து மற்றும் கடல்மோதல் தவிர்ப்பு தொடர்பான சிபார்சுகளைச் சமர்ப்பிப்பதற்காக - அரசாங்கத்தினால் நியமிக்கப்பட்ட, இந்தியக் கடற்படையின் முன்னாள் பிரதித் தலைமை அதிகாரி வைஸ் அட்மிரல் ஜேக்கப், அடுத்த மாதமே கொழும்பு வரவுள்ளதாகத் தெரிவிக்கப்படுகிறது.

கடற்பிரச்சினைகள் தொடர்பான அறிக்கையுடன் இவர் கடந்த 12 ஆம் திகதி கொழும்பு வரவிருந்தார். எனினும், இவரது கொழும்பு விஜயம் இறுதிநேரத்தில் ரத்துச் செய்யப்பட்டது.

இதேவேளை - உயர் பாதுகாப்பு வலயங்கள் தொடர்பான சிபார்சுகளைச் சமர்ப்பிக்க கொழும்பு வந்திருந்த, இந்திய இராணுவ முன்னாள் அதிகாரி மேஜர் ஜெனரல் சதீஸ் நம்பியார், இந்தியாவுக்குத் திரும்பிவிட்டார்.

இவர், மீண்டும் அடுத்த மாதம் கொழும்பு வருவார் எனவும், வைஸ் அட்மிரல் ஜேக்கப்பும் இவருடன் வருவார் எனவும் அரச வட்டாரங்கள் தெரிவித்தன.

## தென்மராட்சி பிரதேசத்தில்

# வெடிபொருள் அகற்றிய பகுதி பிரதேச செயலரிடம் கையளிப்பு

(சரசாலை)

தென்மராட்சிப் பிரதேசத்தில், படையினரால் மிதிவெடி மற்றும் பொறிவெடிகள் புதைக்கப்பட்ட பிரதேசங்களை சம்பிரதாயபூர்வமாக பிரதேச செயலாளரிடம் கையளிக்கும் நிகழ்வு அண்மையில் நடைபெற்றது.

தென்மராட்சிப் பிரதேசத்தில் மிதிவெடிகளை அகற்றும் பணியில் ஈடுபட்டுவரும் 'ஹலோ ட்ரஸ்ற்' நிறுவனம் - கைதடி, நுணாவில் பகுதிகளில் வெடிபொருட்கள் அகற்றிய பிரதேசங்களைப் பிரதேச செயலாளரிடம் கையளித்தது.

இப்பிரதேசத்தில் - வெடி பொருடகள் புதைக்கப்பட்டுள்ள பகுதிகளிலிருந்து அவற்றை அகற்றும் பணியில் இந்த நிறுவனம் ஈடுபட்டு வருகின்றமை குறிப்பிடத்தக்கது. (34)

### வாள்வெட்டில் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வீட்டினுள் நுழைந்த இனந்தெரியாத நபர்கள் வாளினால் வெட்டியதில் படுகாயமடைந்த அருணாசலம் முததையா (வயது 63) என்பவர், யாழ். போதனாவைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டு சிகிச்சை பெற்று வருகிறார்.

# வெளிநாடுகளில் கடமையாற்றும் இலங்கையர் எதிர்கொள்ளும் பிரச்சினைகளை ஆராய குழு!

## மகிந்த சமரசிங்க தலைமையில் அமைக்கப்பட்டது

வெளிநாடுகளில் வேலைசெய்யும் இலங்கையர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் தொடர்பாக விசாரணைகளை மேற்கொண்டு, அறிக்கை சமர்ப்பிப்பதற்கு விசேட நாடாளுமன்ற உபகுழு நியமிக்கப்பட்டுள்ளது.

தொழில் அமைச்சர் மஹிந்த சமரசிங்க தலைமையில் இக்குழு அமைக்கப்பட்டுள்ளது.

வெளிநாடுகளில் வேலை செய்யும் இலங்கையர்கள் எதிர்நோக்கும் பிரச்சினைகள் பற்றியும், அவர்களுக்குத் தொழில்சார்ந்த பயிற்சி அளிக்கப்படவேண்டுமா என்பது பற்றியும் இக்குழு ஆராய்ந்து, பரிந்துரைகளைச் செய்யவுள்ளது.

இந்த விடயம் தொடர்பாக பொது மக்களது ஆலோசனைகளையும், பரிந்துரைகளையும் இந்தக் குழு கோரியுள்ளது. மக்கள் தங்களது கருத்துக்களை இம்மாதம் 26 ஆம் திகதிக்கு முன்னர் உபகுழுவின் செயலாளருக்கு அனுப்பிவைக்குமாறும் கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

### மோட்டார் சைக்களில் விபத்தில் இருவர் படுகாயம்

(யாழ்ப்பாணம்)

வேகமாகச் சென்று கொண்டிருந்த மோட்டார் சைக்கிள், கட்டுப்பாட்டை இழந்து விபத்துக்குள்ளானதில் இருவர் காயமடைந்தனர்.

கடந்த வியாழக்கிழமை கன்னாதிட்டி, காளிகோயிலடியில் இடம் பெற்ற இந்தச் சம்பவத்தில், யாழ்ப்பாணம் கலைப்புலவர் வீதியைச் சேர்ந்த தேவராஜா நவநீதராஜா (வயது 20), சிவராசா பிரியந்தன் (வயது 20) ஆகிய இருவருமே காயமடைந்த நிலையில் யாழ்.போதனா வைத்தியசாலையில் அனுமதிக்கப்பட்டனர். (120)


வாழ்க வளமுடன்

HAPPY BIRTHDAY

மூன்றாவது அகவையில்



பெயர் : இ.இரவீனா
முகவரி : சங்கானை மேற்கு.

ஐந்தாவது அகவையில்

பெயர் : ந.டரன்
முகவரி : லண்டன்.



ஏழாவது அகவையில்



பெயர் : நா.ரவிசங்கர்
முகவரி : மதவடி, வல்வெட்டித்துறை.

பல்லாண்டு காலம் வாழ்கவென வாழ்த்துகின்றோம்

வாழ்க வளமுடன்

சிறாரின் பெயர்:------------------------------

முகவரி :------------------------------

பிறந்த ஆண்டு, திகதி :------------------------------

கூப்பன்கள் பத்தும், புகைப்படமும் இத்துடன் இணைக்கப்பட்டுள்ளன.

------------------------------
பெற்றார் ஒப்பம்


# அம்பாறை மாவட்ட இந்து மகாநாடு பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிப்பு

(அம்பாறை)

அம்பாறை மாவட்டத்தில் எதிர்வரும் 24 ஆம், 25 ஆம் திகதிகளில் நடைபெறவிருந்த இந்து மாநாடு, பிற்போடப்பட்டுள்ளதாக அறிவிக்கப்பட்டுள்ளது. இந்த மாநாடு - எதிர்வரும 31 ஆம் திகதியும் ஜூன் மாதம் 1 ஆம் திகதியும் நடைபெறவுள்ளதாக இந்து கலாசார அமைச்சு வட்டாரங்கள் தெரிவித்தன.

இந்த மாநாட்டின் ஆரம்ப நாளான 31 ஆம் திகதி, காலையில் ஸ்ரீ கணகை அம்மன் ஆலயத்தில் விசேட பூசையைத் தொடர்ந்து காரைதீவு விபுலானந்த மணிமண்டபத்தில் இம் மாநாடு இடம்பெறும்.

அன்று மாலை, கல்முனை வெஸ்லி கல்லூரியின் மண்டபத்தில் ஆய்வரங்கு நடைபெறவிருப்பதாக கலாசார அலுவலர் என்.எஸ். தியாகராசா தெரிவித்தார்.

இரண்டாம் நாள் நிகழ்வாக, ஜூன 1 ஆம் திகதி காலை, அக்கரைப்பறறு சித்தி விநாயகர் ஆலயத்தில் விசேட பூசையும் தொடர்ந்து ஆலையடி வேம்பு கலாசார நிலையத்தில் மாநாடும் நடைபெறும். அன்றைய தினம் மாலையில், தம்பிலுவில் மகா வித்தியாலயத்தில் பிரதான விழா நிகழ்வுகள் நடைபெறவிருக்கின்றன.

இதேவேளை, இந்து கலாசார அமைச்சர் தி.மகேஸ்வரன் முதலாம் திகதி விழாவில் கலந்து கொள்ளுவாரென எதிர்பார்க்கப்படுகிறது. அத்துடன், கலாசார அதிகாரிகளும் தமிழக சொற்பொழிவாளர்களும் இந்த விழாவில் கலந்துகொள்ளவுள்ளமை குறிப்பிடத்தக்கது.

### புயல் சேதங்களை மாவை பார்வையிட்டார்

அண்மையில் ஏற்பட்ட கடும் காற்றினால் மாதகல் பகுதியில், சேதமுற்ற மீனவர்களின் சொத்துக்களை தமிழ்த் தேசிய கூட்டமைப்பு நாடாளுமன்ற உறுப்பினர் மாவை சேனாதிராசா நேற்று முன்தினம் பார்வையிட்டார்.

அத்துடன், மீனவர்களின் பிரச்சினைகள் குறித்தும் மாவை சேனாதிராசா விசாரித்து அறிந்து கொண்டதுடன், பிரச்சனைகளுக்குத் தீர்வு காண்பது தொடர்பாக உரிய நடவடிக்கை எடுப்பதாகவும் உறுதியளித்தார்.

# பெண்களுடன் சேஷ்டை புரிந்த இளைஞர்களுக்கு எச்சரிக்கை

(உடுப்பிட்டி)

வீதிகளில் நின்று, பெண்களுடன சேஷ்டை புரிந்த இளைஞர்கள், கலாசாரத்தினைப் பேணும் குழுவிடம் சிக்கினர்.

நேற்று முன்தினம் உடுப்பிட்டி, தொண்டமனாறுப் பகுதிகளில் இந்தச் சம்பவம் இடம்பெற்றது.

மேற்படி இரு இடங்களிலும் தினமும் கூடிநிற்கும் இளைஞர்கள், ரியூசன், பாடசாலைக்குச் செல்லும பெண் பிள்ளைகளுடன் சேஷ்டைவிடுவதுடன் தகாத வார்த்தைகளைப் பேசியும் வந்தனர்.

இது தொடர்பான தகவல் கிடைத்ததை அடுத்தே, அந்தப் பகுதிக்குச் சென்ற கலாசாரத்தை பேணுவோர், அவர்களைப் பிடித்து எச்சரிக்கை செய்து விடுவித்தனர்.

### நெல்குற்றிய தொழிலாளி காயம்

(யாழ்ப்பாணம்)

அரிசி ஆலையில் - நெல் குற்றிக கொண்டிருந்த தொழிலாளி அணிந்திருந்த சாரம், நெல் குற்றும் இயந்திரத்தில் சிக்கியதனால் தூக்கி வீசப்பட்டதில் அவர் காயமடைந்தார்.

கடந்த வியாழனன்று இடம் பெற்ற இச்சம்பவத்தில் - இரணைப் பாலை, 7ஆம் வட்டாரத்தைச் சேர்ந்த சிவராசா சிவலோகநாதன் (வயது 24) என்பவரே பலத்த காயங்களுக்குள்ளாகி யாழ்.போதனா வைத்திய சாலையில் அனுமதிக்கப்பட்டார். (21)

## ஜி.ரி.இசற்றின் உதவியுடன்

# வெற்றிலைக்கேணி பகுதியில் 107 வீடுகள் அமைக்கப்படும்!

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள வெற்றிலைக் கேணி கிராமசேவகர் பிரிவில் - 107 வீடுகளைக் கட்டிக்கொடுப்பதற்கு, ஜி.ரி. இசற். நிறுவனம் முன்வந்துள்ளது.

இதற்கான பயனாளிகளைத் தெரிவுசெய்யும் கூட்டம், அண்மையில் மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் வி.ப.வேலாயுதபிள்ளை தலைமையில் நடைபெற்றது. இதில் ஜி.ரி.இசற் நிறுவன உயரதிகாரிகளும் கலந்துகொண்டனர்.

### மரக்கிளையில் மோதுண்டு படுகாயம்

(யாழ்ப்பாணம்)

லான்ட் மாஸ்ரரின் மேலிருந்து பயணஞ்செய்தவர், வீதிக்குக் குறுக்கே இருந்த மரக்கிளையுடன் மோதுண்டு வீழ்ந்து படுகாயமடைந்த நிலையில் யாழ். போதனா வைத்திய சாலையில் சிகிச்சைக்காக அனுமதிக்கப்பட்டார்.

நேற்றுமுன்தினம் இடம்பெற்ற இந்த சம்பவத்தில், உடுவில் கற்பகப்பிள்ளையார் கோவிலடியைச் சேர்ந்த கதிர்காமு துரைராசா (வயது 54) என்பவரே காயமடைந்தவராவார். (21)

# மருதங்கேணி சமுர்த்தி வங்கிக்கு கட்டடம் அமைப்பதற்கு காணி!

(மருதங்கேணி)

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில் இயங்கிவரும் முதலாவது சமுர்த்தி வங்கிக்கு, அரச காணி ஒதுக்கப்பட்டுள்ளது.

இச்சமுர்த்தி வங்கிக்கு நிரந்தரக் கட்டடம் அமைப்பதற்கு, அண்மையில் 10 இலட்சம் ரூபா ஒதுக்கப்பட்டது.

மருதங்கேணி சந்திக்கும் தாளையடிக்கும் இடையிலான பிரதான பாதையில் இக்காணி ஒதுக்கப்பட்டுள்ளதாக செயலக வட்டாரங்கள் தெரிவித்தன.

தற்சமயம், மருதங்கேணி சமுர்த்தி வங்கி - தனியார் கட்டடத்தில் இயங்கிவருகின்றமை குறிப்பிடத்தக்கது.

# இலக்கியச்சோலை

# காத்திருப்பு

## சிறுகதை

யோ. கர்ணன்

நிலவு காலித்து வெகுநேரமாகிவிட்டது.

தொலைவில் எங்கோ, விட்டுவிட்டுக் கேட்டுக்கொண்டிருந்த நாயொன்றின் ஊளையொலியைத் தவிர, ஊர் நிசப்தமாயிருந்தது.

தெரு விளக்குகளைத் தவிர மற்ற அனைத்து விளக்குகளையும் அணைத்துவிட்டு, வீடுகளுக்குள் மனிதர்கள் அடங்கிவிட்டார்கள். பத்தரை மணியிருக்குமா? இருக்கலாம்.

ஊரின் வடக்கு மூலையிலுள்ள அந்தக் குடிலில் மட்டும் ஓய்விருக்கவில்லை. இரவு வெகுநேரமாகியும் அந்தக் குடிலினுள் இரண்டு உயிர்கள் ஊசலாடிக்கொண்டிருந்தன.

ஊரைப் பிளந்துபோகும் பிரதான தெருவிலிருந்து வலது பக்கமாகப் பிரிந்து போகின்றதே ஒரு தெரு, அதுதான் வெள்ளத்தெரு. பெயர்தான் தெருவே தவிர, அது தனித்தெருவல்ல. கோடை காலங்களில் தெருவாகவும், மழை காலங்களில் வெள்ள நீர் ஓடி வயலுடன் சேரும் வழியாகவும் பயன்படுகிறது. அதனால்தான் அதனை வெள்ளத்தெரு என்றழைக்கின்றனர்.

அந்தத் தெருவின் இடது கைப்பக்கமாக இருக்கிறதே ஒரு வைரவர் கோயில், அதற்கப்பால் பாருங்கள்.... நிரை நிரையாக வளர்ந்திருக்கும் பூவரசு மரங்களிற்கடுத்ததாக ஒரு பெரிய புளியமரம் நிற்கின்றது. அதன் கீழ்தான் அந்தக் குடிசையிருக்கின்றது.

குடிசையின் மீது வலையைப் போர்த்தது மாதிரி, தோற்றம் காட்டியது. அவ்வளவு பொத்தல்கள். அப்பொத்தல்கள் வழியே நிலவொளி குடிசையை எட்டிப்பார்த்துக் கொண்டிருந்தது.

அந்தக் குடிசையினுள்தான் இரண்டு ஊசலாடும் உயிர்கள்!

மூர்க்கத்தனமாக வீசும் காற்றிடம் தன் உயிரைப் பறிகொடுத்துவிடக்கூடாது என்பதற்காகப் போராடியபடி எரியும் கைவிளக்கு ஒன்று. காலப் புயலில் சிக்கித் தன் உயிர் போவதற்குள், மகனைக் காண ஏங்கும் தாயான, அக்குடிசைச் சொந்தக்காரக் கிழவி மற்றொருத்தி.

குடிசைக்குள்ளிருக்கும் மண் சுவருடன் சாய்ந்தபடி, நிலவொளியில் நனைந்திருக்கும் படலையடியைப் பார்த்துக்கொண்டிருந்தாள். இடையிடையே தன் பூஞ்சல் கண்ணைச் சுருக்கியும்.... இன்னும் சிலவேளைகளில் முகத்தைச் சற்று முன்னகர்த்தி.... கண்களின் மேல் கையை வைத்துப் பார்த்துக்கொண்டிருந்தாள். அவளது கண்களில் எல்லையற்ற துயர் விரிந்திருந்தது.

இடையிடையே எதனையோ முணுமுணுத்துக்கொண்டாள். அப்போது அவளது முகம் விவரிக்கமுடியாத உணர்ச்சிக் கலவைகளின் விளைநிலமாகும். உடனே சேலைத் தலைப்பால் கண்களைத் துடைத்துக்கொள்வாள். பின்னர் ஏதோ நினைத்தவளாகப் பெரிதாகத் திட்டுவாள். அவளது திட்டுதலில் "குறுக்கால போவார்..." "ஏன் இஞ்சை வந்தாங்கள்..." "உங்கட நாட்டில இருக்கிறதுதானே" என்ற வார்த்தைகளில் ஏதாவதொன்றுக்கோ அல்லது அனைத்திற்குமோ இடமிருக்கும்.

இரவில் மட்டுமல்ல, பகலிலும் அவளது நிலை இதுதான். இதுதான் அவளது நாளாந்தக் கடமை. நேரகாலமில்லாது, சுவருடன் குந்தியிருந்துகொண்டு படலையடியையே பார்த்துக்கொண்டிருப்பாள். இதற்கடுத்ததாகத்தான் சமையல், சாப்பாடெல்லாம். எப்போதாவது சமைப்பாள், சாப்பிடுவாள்.

ஒரு கோப்பை உணவில் அடங்கிவிடும் இந்த வயிற்றைவிட, பத்து மாதம் சுமந்து பெற்ற மகனிடம்தான் அவளது உயிர் தங்கியுள்ளது. எழுபது வயதாகின்ற இன்றைய நாளிலும், மகனைக் கண்டுவிடவேண்டுமென்ற துடிப்புத்தான் அவளுள் நிறைந்திருக்கின்றது.

அவளுள் அசைக்கமுடியாத நம்பிக்கையொன்றிருந்தது. எப்படியும் மகன் வந்துவிடுவான் என்று. அந்தப் பாதாளச் சிறைக்குள்ளிருப்பினும்... ஒளிகூட நுழையமுடியாத இடமாயிருப்பினும், தன்னிடம் வந்து சேர்ந்துவிடுவான் எனத் தீவிரமாக நம்பிக்கொண்டிருந்தாள். அந்த நம்பிக்கைதான் பறக்கத் துடிக்கும் உயிர்ப் பறவையை அவளுள் இழுத்துப் பிடித்துக் வைத்திருந்தது.

வழமைபோலவே குடிசைக்குள்ளிருந்தபடி வெளியே பார்த்துக்கொண்டிருந்தாள். ஒட்டியுலர்ந்த கன்னங்கள்... வெறுமையும், ஏக்கமும் கலந்த விழிகள்... அந்த விழிகள் எதையோ தேடிக்கொண்டிருந்தன. பாழும் இருள் - நிலவொளியை எங்கும் சிந்தவிடுகின்றதா? படலையடியில் வளர்ந்திருந்த வேப்பமரத்தின் நிழல், சூனியத் திரையாய் விரிந்திருந்தது. ஒளி வற்றிய விழிகளினூடே அந்தக் கிழத்தாய் மனம் சூனிய வெளியை வெறித்துக்கொண்டிருந்தது.

வெறுமை விரவி, மனம் மரத்துப் போயிருந்தது. உயிர் மூலம் கலங்கும் சோகம், அடி இதயத்திலிருந்து நீளமான பெருமூச்சுக்களாக வெளியேறிக்கொண்டிருந்தன.

இந்தப் பொல்லாப்புமிகு உலகை நினைக்க அவளுக்கு எரிச்சல்.... கோபங்களை மீறிய ஆற்றாமை கலந்த இழப்புணர்ச்சிதான் தோன்றும். செத்துப்போய்விடலாம் போலவும் தோன்றும்.

இப்போதல்ல, முப்பத்தாறு வருடங்களின் முன்னேயே செத்துப்போய்விடவேண்டும் என நினைத்து பின், முடிவை மாற்றிக்கொண்டுவிட்டாள். அப்போது வாழவேண்டுமென முடிவெடுக்கக் காரணமாயிருந்த மகனே, இப்போது நினைவுகளினால் கொல்பவனாகிவிட்டான்.

அவளுக்குக் கணவனாக வாய்த்த அந்த அயோக்கியப் பயல் - இரண்டாம் தாரமாக இன்னொரு கல்யாணம் செய்துகொள்ளும்போது முதன்முதலாக செத்துப்போகவேண்டுமென்ற உணர்வு உந்த, வீட்டைவிட்டு வெளியேறியவள். ஆயினும், பின் முடிவை மாற்றிக் கொண்டுவிட்டாள். அப்போது அவளது மகன் இரண்டு மாதமாக வயிற்றில் வளர்ந்து கொண்டிருந்தான்.

தான் சாவதைப் பற்றிக் கவலையில்லை, மகனை ஏன் கொல்லவேண்டும் என்று உணர்ந்ததால், அன்று முடிவை மாற்றிவிட்டாள்.

அவனை வயிற்றிலும்... தனித்து நின்று அவனை ஆளாக்க வேண்டுமென்ற வெறியை மனதிலும் ஏந்திக் கொண்டு வாழ்வுடன் போராடப் புறப்பட்டாள்.

முப்பத்தாறு வருடங்களின் முந்தைய கதையது. அன்று அமைத்த குடிலிது. இந்தக் குடிலிலிருந்துதான் அருவி வெட்டுக்கும்.... புல்லுப் பிடுங்கவும் சென்று மகனை வளர்த்தாள். இதற்காக அவள் கொடுத்த விலைகள் அதிகம். பட்ட உடல்... உளவதைகள்தான் இன்றும் கண்முன் நிழலாடுகின்றன. அப்படி வளர்த்த மகனைப் பிரிந்திருக்கமுடியுமா?

எல்லாப் பிள்ளைகளைப் போலவும் தன் மகனை அவள் படிக்கவைக்கவில்லைத்தான். தன்னால் இயன்றதைச் செய்திருக்கிறாள்தானே. ஏழாவது வகுப்பு வரையில் படிக்க வைப்பது சாதாரண காரியமா?

அதன்பின் அவன் உழைக்கத் தொடங்கிவிட்டான். மிக இளம் வயதிலேயே தெரிந்தவர் ஒருவரின் கடையில் உதவியாளனாகப் போய்விட்டான். மற்றப் பிள்ளைகள் வெள்ளைச் சிட்டுக்களாகப் பள்ளி செல்கையில், தன் மகன் மட்டும் கடைக்குப் போவதைக் காண, அவளுள் துயரக்கல் மனதை அழுத்தும்.

நிகழ்காலப் பாதை - முட்கள் நிறைந்திருப்பினும், எதிர்காலப் பாதையும் அப்படியேயிருக்குமென, அவள் நினைக்கவில்லை. மகன் வளர்ந்து, குடும்பநிலையை மாற்றி... ஊருக்குள் தலை நிமிர்ந்து வாழலாம் என்றுதான் எண்ணியிருந்தாள்.

அந்த வாழ்வு ஏன் அழிந்துபோனது?

உயிர் கொடுத்து... ஊண் கொடுத்து உருவாக்கிய பிள்ளையைப் பிரிந்த பின், வாழ்ந்தென்ன பயன்? இத்தனை காலமும் பட்ட கஷ்ரமெல்லாம் கானல் நீராகப் போவதைக் காணக்காண அவளுள் அழுகை முட்டிக்கொண்டுவரும்.

இராணுவம் வந்த புதிதில் ஒரு முறை சுற்றி வளைப்பின்போது அவனும் அகப்பட்டுவிட்டான். கைது செய்யப்பட்டவர்களுள் அவனும் அடக்கம். அவள் துடித்துப் போய்விட்டாள், தள்ளாத வயதிலும், உள்ள முகாம் முழுவதும் தேடியலைந்து... அதிகாரிகளின் காலைப் பிடித்தும் பலன் கிட்டவில்லை. அந்த முகாமில் .... இந்த முகாமில் என அவர்கள் சொல்வதைக் கேட்டு ஊரெல்லாம் அலைந்ததுதான் மிச்சம்.

அப்போது அதிர்ஷ்டம் இருந்திருக்கிறது. இரண்டு வாரத்தின் பின் விடுதலையாகி வந்துவிட்டான். விசாரணையின் 'கவனிப்பில்' சற்று நொந்து போயிருந்தான்.

அவளுக்குத் தாங்கமுடியாத சந்தோசம். இவ்வளவுடன் என்றாலும் வந்தானே என பேச்சுவாக்கில் யாரோ சொன்ன தகவலொன்றும் அவளுக்கு ஆறுதலாயிருந்தது. "ஒருக்கால் பிடிச்ச ஆக்களைத் திரும்பவும் பிடிக்க மாட்டாங்களாம்". இனிமேல் பிரச்சனையில்லை என நிம்மதிப் பெருமூச்சு விட்டுக்கொண்டாள்.

மனிதர்கள் நினைத்தபடி எங்காவது காரியங்கள் நிகழ்ந்ததுண்டா?

முதலாம்முறை கைதுசெய்யப்பட்டு ஆறு மாதத்தின் பின். இப்போதிருந்து ஏழு வருடங்களின் முன் - மீண்டுமொருமுறை கைது செய்யப்பட்டான்.



அவள், மீண்டும் முகாம்களிற்கான 'யாத்திரை'யைத் தொடங்கினாள். பலரது காலைப் பிடித்தாள். பலன்தான் கிட்டவில்லை. இம்முறை அதிர்ஷ்டக் காற்றும் வீசவில்லை.

ஊரெல்லாம் தேடி, அவள் ஓய்ந்துவிட்டாள். அருகிலிருக்கும் வைரவரிடம் பொறுப்பை ஒப்படைத்துவிட்டு, அவரை "குளிர்விக்கும்" வேலைகளில் - விரதம், வழிபாடு என்று இறங்கியிருக்கிறாள்.

இடையில், பிள்ளைகளைப் பறிகொடுத்தோர், நகரில் மறியல் செய்வதையறிந்து, அதிலும் கலந்துகொண்டுவிட்டாள்.

எதுவுமே நடக்கவில்லை. பெரும் யுகயுகாந்திரமாய் நீண்ட நிமிடங்கள் பெருகி, ஏழு வருடங்களைக் கடந்துவிட்டது. ஆயினும், அவளுக்குள் ஒரு நம்பிக்கைச் சுடர் எரிந்துகொண்டிருக்கின்றது. அணையக் காத்திருக்கும் அவளின் உயிரின் பிடிமானமும் அதுதான் - "எப்பிடியும் என்ர ராசா என்னட்ட வருவான்..."

இந்த நம்பிக்கைதான், அவளைத் தினமும் படலையடியைப் பார்க்க வைத்துக் கொண்டிருந்தது. இரவிலும் வெகுநேரம் வரை தூக்கமில்லாமல் படலையடியையே வெறித்துக்கொண்டிருப்பாள்.

ஏழு வருடங்களாக அட்சரம் பிசகாது நிகழும் அன்றாட நிகழ்விது.

சிந்தனையில் ஆழ்ந்திருந்தவள், வெளியே ஏதோசத்தம் கேட்கவே திடுக்குற்றுச் சுய நினைவு வரப்பெற்றவளாக வாயிலைப் பார்த்தாள். எதுவுமே தெரியவில்லை. அருகிலிருந்த கைவிளக்கைத் தலைக்கு மேலே தூக்கிப் பிடித்தபடி பூஞ்சல் கண்களால் உற்றுப்பார்த்தாள் - எதுவுமே தெரியவில்லை.

கையைத் தரையில் ஊன்றி எழுந்தாள். தள்ளாடித்தள்ளாடி படலையடியை அடைந்தாள். "எட தம்பி....ராசா..." ஆவலாகக் கூப்பிட்டுப் பார்த்தாள். நிசப்தம்தான் நிலவியது.

படலையைத் திறந்து பார்த்தாள் - அநாதரவாக இப்பகுதியில் சுற்றித்திரியும் பெட்டை நாய் வாலாட்டியபடி நின்றது. ஏமாற்றம் கலந்த பெருமூச்சு அவளுள்ளிருந்து வெளிப்பட்டது.

திரும்பிக் குடிசைக்கு நடந்தாள். நாயும் பின்தொடர்ந்தது. குடிசை வாயிலில் சுருண்டு கொண்டது. குடிசைக்குள் நுழைந்து பாயிலிருந்தாள். தொலைவில் நேரத்தைக் குறிக்கும் மணி ஒலித்தது. ஒன்று... இரண்டு... என எண்ணிக்கொண்டாள் - மணி பன்னிரண்டு.

விளக்கை அணைத்துவிட்டு பாயில் சரிந்தாள். சற்று நேரமாவது தூங்கினால்தானே நாளையும் மகனை எதிர்பார்த்திருக்க முடியும்! ✪

---

## கவிக்குவி



"நமக்குத் தொழில் கவிதை" என்றானே தீக்கவிஞன்!
எனக்குத் தொழிலல்ல;
எனக்கு அது உயிராம்.
கவிதை முழுதாய்க் கனிந்து வசப்பட்டு
எனக்குள் 'நிரந்தரியாய்'
இருக்க வரங்கேட்டேன்.
எனககுக் கிடைத்ததுவோ கவிதையெனும் அண்டத்தின்
சிறுதுகளே!
அந்தச் சிறுதுகளின் உயிரெனக்குள்
வளர்த்தபேர் இன்பத்தை மாந்தியதால்....
முழு உயிரும்
எனக்குள் நிரந்தரமாய் இருக்க வரங்கேட்டேன்.
வரமாய்க் கவிதையுயிர் கிடைத்தால்
இப்பிறவியினைக்
கழித்திட என் கவிதையினை
கருவியாய் நான் கைக்கொள்வேன்.

- ஜெயசீலன்

# A-9 ஐ நீளும் நினைவுகள்




கண்டி வீதியில் நேராய்த் திரிந்த நற்
காலம் போனது! காடு கரம்பைகள்
கண்டு எங்கோ அலைந்து நெடுந்தூரம்
களைத்துச் சுற்றி "யாழ்க் கழுத்தை" கடந்திட்ட
"இன்பம்" போனது! கிழக்குக் கடலெல்லை
இருந்து... இயக்கச்சிச் சந்திவரை நெடுங்
குண்டு வேலி பிறந்தது! பின்னரோ
கொம்படி யூடும் பயணங்கள் நின்றது.

எத்திசையூடு தெற்குக்குப் போவது?
எப்படியடா பயணந் தொடர்வது?
நித்தமும் வன்னி சென்று திரும்பிய
நினைவை எப்படி மீண்டும் நினைப்பது?
கத்தி விளிம்பில் அவசர தேவைக்குக்
கடப்பதெப்படி; கேள்வி பிறந்தது
பொத்திப் பாதையை... வேட்டு மறிக்கையில்
புதிய பாதை கிளாலியிற் தோன்றிற்று.

A - 9 இலே பளை வரை செல்வது;
அங்கிருந்து புலோப்பளை யூடாக
போய்க் கிளாலிக் கரையில் மிதப்பது;
புறப்படுகிற "வள்ளத் தொடுவையில்"
ஏறி இரவு வேளையில் மட்டுமே
எமன் கடலினில் வந்தால்... அவனினை
ஏய்த்து பூநகரி நல்லூர்த் துறையிலே
இறங்கிக் கொள்வது; பயணந் தொடங்கிற்று!

- ஜெயங்கொண்டான்.

# விலகிப் போதலின் வலி!

காற்றுக் கனத்துப் போயிருந்தது.
அதன் முதுகிலேறிச்
சுடலைச் சாம்பல் சவாரி
செய்ததன் விளைவாயிருக்க வேண்டும்!
பயணப்படுதலின் போது பாதைகளின்
பரிச்சயமின்மை.
பழக்கப்பட்டதொரு நுகர்வு
வந்து நாசியில் பட்டதும்
வெளியில் அலைந்து திரிந்து கொண்டிருந்த
ஒளித்திரட்சிகளை அவசரமாய்த்



- தபின் -

தின்னுவதற்கு விழிகள் முயன்றன.
எலும்புத் துண்டுகள்
உக்கிப்போன உடைகள்
தலை பிளந்த கட்டடங்கள்
குருதி குடித்த நிலத்தின் ஏவறை!
இதுவோ என் பூமி?
தலைக்குள் பாறையொன்று
வினாவாய் மாறிக் குந்தியது!
சற்றுமுன் நாசிக்குள் புகுந்திருந்த
"பழக்கப்பட்ட நுகர்வு"
மறைந்து, பயங்கரத்தின் நிழல்
என் மீது மெல்ல வீரியத் தொடங்கிற்று!
இப்போது -
என் பூமியின் நினைவுகளிலிருந்து
என் நினைவுகள்
எத்தனையோ ஒளியாண்டுகளுக்கப்பால்
விலகிப் போய்க்கொண்டிருக்கிறது.

# நூல் அறிமுகம்




ஆழ்வார் முருகதாஸ் எழுதிய 30 கட்டுரைகள் - 'கட்டுரைத் தேனருவி' என்ற பெயருடன் புத்தகமாக வெளிவந்துள்ளது.

இன்றைய காலத்தில் மாணவர்களின் தமிழ்மொழிவிருத்தி மிகக் குறைந்த அளவிலேயே காணப்படுகின்றது. எப்படிக் கட்டுரை எழுதுவது, பந்திபிரிப்பது எவ்வாறு, பிழை இலலாமல் சொற்களை எவ்வாறு எழுதுவது என்பதில் மாணவர்கள் தேர்ச்சியிலலாமல் இருக்கின்றனர். இவர்களின் நன்மை கருதியே இந்தப் புத்தகம் வெளியிட்டதாக ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

மாணவர்களின் கட்டுரைகள் திருத்துதல், பேச்சுக்கள் தயாரித்தல் ஆகிய ப்ணிகளை மேற்கொண்டபோது, மாணவர்களின் கட்டுரைகள் தரமற்றனவாகவே காணப்பட்டன. அவர்களின் அறிவுத்துறையை விருத்தி செய்யவேண்டும் என்ற எனது நோக்கத்திற்கிணங்க துணிச்சலோடு இறங்கினேன் என்று ஆசிரியர் குறிப்பிடுகின்றார்.

இந்தப் புத்தகத்தின் மூலம் க.பொ.த. மாணவர்கள் கூடுதல் பயனைப் பெறக்கூடிய வாய்ப்புக்கள் உண்டு.

- மகரம்






பத்திரிகையாளராக வருவதற்கு உங்களுக்கு ஆர்வம் உண்டா? என்ற கேள்வியுடன் 'மனதில் நினைததததை, நேரில் பார்த்ததை, பிறர் சொல்லக் கேட்டதை இலகு மொழியில் எழுதத் தெரிந்தால் போதும்' என்ற விடையுடன் பத்திரிகையாளராக வருவதற்குரிய வரைவிலக்கணத்தை முதல் அத்தியாயத்தில் குறிப்பிட்டு வெளிவந்துள்ளது, அருட்திரு ரூபன் மரியாம் பிள்ளை எழுதிய "பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம்" என்ற இந்நூல் ஆகும்.

பத்திரிகைத்துறையில் தான்பெற்ற அனுபவங்களையும், பயிற்சிகளையும் உள்ளடக்கி இந்நூல் எழுதப்பட்டுள்ளது. பத்திரிகையாளராக வரவேண்டியவர்கள் இந்தநூலை அவசியம் கற்கவேண்டும்.

'பத்திரிகை இயலுக்கு ஒரு அறிமுகம்' போன்று, இதழியல் பற்றி நூல்கள் தமிழில் அதிகமாக, குறிப்பாக ஈழத்தில் வெளிவரவில்லை. ஆனால், இதழியல் பற்றி பல கருத்தரங்குகளும், பட்டறைகளும் இடம்பெற்றுள்ளன. இதனூடே பத்திரிகையாளராக வரவேண்டும் என்று ஆசைப்பட்டவர்கள், கருத்தரங்குகளில் காதிற்கேட்ட அறிவுரைகளை மாத்திரம்தான் பெற்றுள்ளார்கள். இதை நிவர்த்தி செய்வதற்கே, 'பத்திரிகை இயலுக்கு ஒரு அறிமுகம்' என்ற நூல் மூலம் படித்து, கிரகித்து பயன்பெறக்கூடியதாக இந்நூல் வெளிவந்துள்ளது.

"அருட்திரு ரூபன் மரியாம்பிள்ளையின், 'பத்திரிகை இயலுக்கு ஒரு அறிமுகம்' எனும் நூல், தமிழுக்குப் புதிய வரவு. பாரதி கூறியவாறு - எட்டுத்திக்கும் சென்று சேர்த்த கலைச்செல்வம். மேற்கே வளர்ந்த மேன்மைக் கலைகளில் ஒன்றான இதனை, தமிழுக்குத் தந்ததன் மூலம், சிறந்த தேன் தமிழ்ப்பணி நிறைவேற்றப்பட்டுள்ளது" என்று, பேராசிரியர் இரா.சிவச்சந்திரன் இந்நூல் பற்றி கருத்துத் தெரிவித்துள்ளார்.

1979 ஆம் ஆண்டு 'மௌன ஊர்வலம்' என்ற பாதுகாவலன் சிறுகதை மூலம், இவர் பத்திரிகைத்துறைக்கு அறிமுகமாகியதோடு, 200 இற்கும் அதிகமான கட்டுரைகளைப் பாதுகாவலன் பத்திரிகையில் எழுதியுள்ளார்.

மற்றும் ஈழநாடு, முரசொலி போன்ற தினசரிகளில் எழுதிய அனுபவங்களும், பாதுகாவலன் பத்திரிகையின் ஆசிரியராக இருந்த பட்டறிவு என்பனவே, 'பத்திரிகை இயலுக்கு ஓர் அறிமுகம்' என்ற நூல் எழுதப்பட்டதற்குக் காரணம் என ஆசிரியர் குறிப்பிட்டுள்ளார்.

பத்திரிகைத்துறை சார்ந்த பல விடயங்களை, பல அத்தியாயங்களில், விளக்கக் குறிப்புக்களுடன் செய்திகள் எழுதுவது எப்படி? அதற்கு எப்படி தலையங்கம் இடுவது? ஒப்புநோக்கற்பணி, ஆசிரிய தலையங்கம் எழுதுவது, நேர்காணல் போன்ற பல விடயங்களை ஆசிரியர் இந்நூலில் விரிவாக விளக்கியுள்ளார்.

- மணிசேகரன்.

# பாலையும் சோலையும்



"மாணவரின் உளவியலை அறிந்து, தனியான தரத்தினை மதிப்பிட்டு, அவர்களின் முன்னறிவைத் தேடி (தேடல்), புதிதாக அவர்கள் அறியவேண்டியவற்றை அவர்களின் உள்ளங்களிலே பதித்து (பதித்தல்), அவர்கள் அறிந்துகொண்டவை எந்த அளவிற்குச் சரியானவை, பயனுள்ளவை என்று ஆராய்ந்து, அவ்வறிவைப் புதியவற்றில் அவர்கள் பிரயோகிக்க வழிகாட்டி (பிரயோகம்), தண்டனை முறையைக் கையாளாது, அன்பு வழியிலே பொறுமையைக் கடைப்பிடித்துக் கற்பித்தல் வேண்டும்" என்ற உண்மைகளைக் கற்றும், கற்பித்தற் பயிற்சியிலே ஈடுபட்டும் பெற்றதே ஆசிரியப் பயிற்சியால் விளைந்த பயன்களாகும். 'மேலே கூறியவற்றை இயன்றளவு கடைப்பிடித்து, நல்லவரும் - வல்லவருமான மாணவரை உருவாக்குவேன்' என்ற நம்பிக்கையுடனும், ஆர்வத்துடனும் 1952 ஆம் ஆண்டுத் தொடக்கத்திலே பதுளைக்குச் சென்றேன்.

என் நம்பிக்கையும், ஆர்வமும் எந்தளவிற்குப் பயனளித்தன? அன்று யாழ்ப்பாணத்திலிருந்து பதுளை செல்வது ஒரு முழுநாள் பயணம். மாலை 'மெயில்' புகைவண்டியிலே புறப்பட்டு வைகறையில் பொல்காவலயை அடைந்து, அங்கு இறங்கி மலைநாடு செல்லும் புகைவண்டிக்குப் பல மணித்தியாலங்கள் காத்திருக்க வேண்டும். இந்த இடைவெளியில் புகையிரத நிலையத்திற்கு வெளியே சென்று அங்கிருந்த யாழ்ப்பாணத்துத் தேநீர்க் கடையிலே அவசிய கருமங்களை முடித்து, உணவுண்டு, மதிய உணவையும் பொதி கட்டிக்கொண்டு, மலையகப் புகையிரதம் வரும்வரை சிறிது தூரம் உலாவிவருவதும் வழக்கமாயிருந்தது.

மலைநாட்டில், பதுளைவரை உள்ள பாடசாலைகளிலே பணிபுரியும் ஆசிரியர்கள் பலரும் கூட்டாகப் பயணிப்பதால், பயண அலுப்போ, நீண்டநேரக் காத்திருப்போ சலிப்பை ஏற்படுத்துவதில்லை. (புகைவண்டியிலிருந்து இறங்கும்வரை - கடதாசி விளையாட்டும், வம்பளப்புக்களுந்தான்). இன்று போல டீசலில் ஓடும் தொடர்வண்டியும் அன்றில்லை. நிலக்கரி, விறகு எரித்து அவற்றிலிருந்து பெறப்படும் சக்தியில் 'கரிக்கோச்சிக்கள்' ஓடின. மலைப்பாதையில் உயரம் கூடிய பகுதிகளைக் கடக்க முன்னும் பின்னும் இரு வண்டிகளை இணைத்து இயக்குவதும் அன்றைய வழக்கமாயிருந்தது. புகை

## கலாநிதி சொக்கனின் வாழ்க்கைப் பதிவுகள்

வண்டி ஓடுகையில், கரித்துணுக்கைகள் பறந்துவந்து கண்களில் விழுந்து உறுத்தும். அந்த உறுத்தலால் கண்களைக் கசக்க நேரலாம். அதனால், கண்கள் வேதனை தருவதும், சிவப்பதும் சகசமான நிகழ்ச்சிகள். எஞ்சிய கரித்துண்டுகள் உடைகளில் விழுந்து அவற்றைக் கறுப்பாக்கி, புகைவண்டியிலிருந்து இறங்கும்பொழுது, இரவின் நித்திரை விழிப்பால் சோர்ந்த முகமும், அழுக்குடையுமாகப் பார்க்கச் சகிக்காத கோலத்தை அன்றைய பதுளைப் பயணம் - நீண்ட நெடும் பயணம் தந்ததென்றால் அது மிகையுரையல்ல. ஆனால் - இளமைத் துடிப்பும், உற்சாகமும் என்வரையிலே பதுளைப் பயணத்தை அலுப்பு நிறைந்ததாய் ஆக்கவில்லை என்றே சொல்லவேண்டும்.

பதுளை ஊவாக் கல்லூரியிலே வேலை கிடைத்த அன்று பிற்பகலே, ஒரு நாள் லீவெடுத்து யாழ்ப்பாணம் பயணமாகி, மறுநாள் பிற்பகல் யாழ்ப்பாணம் வந்து, அன்றிரவு நண்பர்களுடன் திரைப்படம் பார்த்துவிட்டு, அடுத்தநாள் பிற்பகல் பதுளைக்குப் பயணமானேன் என்றால், அது எனது இளமைத் துடிப்பும், மிடுக்கும் என்றுதான் சொல்லவேண்டும்.

மலையகப் புகைவண்டிப் பயணத்தில் இறுதிநிலையமே பதுளை. அது அழகான சிறிய நகரம். பிரதான வீதிகள் என்று நான்கு மட்டுமே உள்ளன. மலைநாட்டின் இயல்பிற்கேற்பப் பள்ளமும் மேடுமாய் அந்த வீதிகள் காட்சிதரும். பௌத்த பன்சல, சைவக் கோயில், கத்தோலிக்க கிறிஸ்தவ தேவாலயங்கள் என்பன அமைதி கொலுவிருக்கும் புனித தலங்கள், சிங்களவர், மலையகத் தமிழர், யாழ்ப்பாணத்தார், முஸ்லிம்கள் ஆகியோரின் வணிகநிலையங்கள், படமாளிகைகள், உணவுக்கடைகள், விடுதிகள் என்பன வீதிகளை அணிசெய்தன.

(தொடரும்....)

ஈழநாடு
267, Navalar Road, Jaffna.
T.P. - 021-2225107 www.eezhanadu.com

சிந்தனைக்கு

சினத்தைப் பொருள்என்று கொண்டவன் கேடு
நலிந்துஅறைந்தான் கைபிழையாது அற்று.

- திருக்குறள்.

# நமது நோக்கு

## கதிர் காமத்தனம்!

சர்வதேச அரங்குகளில் தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டத்திற்குப் பலவகையிலும் பாதிப்பை ஏற்படுத்துவதாக பிரசாரங்களையும், சந்திப்புக்களையும் முன்னெடுத்து - தன்னைச் சிங்கள அரசாங்கத்தின் மிக விசுவாசத்திற்குரிய நபராக இனங்காட்டிக்கொண்டவர் லக்ஷ்மன் கதிர்காமர்.

மேற்கு நாடுகள், தமிழ்மக்களின் விடுதலைப் போராட்டம் பற்றிய உண்மைநிலையை அறிந்துகொண்டு, போராட்டத்தைக் கொண்டு செலுத்தும் விடுதலைப்புலிகளின் நியாயபூர்வமான நிலைப்பாடு பற்றியும், அர்ப்பணிப்பு மிக்க தியாகங்கள் தொடர்பாகவும் - எப்போதெல்லாம் அவை சரியான திசையில் கவனம் செலுத்த முனைந்தனவோ - அப்போதெல்லாம், குட்டையைக் குழப்பி - தன்னையும் 'தமிழரென' அடையாளப்படுத்தியவாறு, லக்ஷ்மன் கதிர்காமர் மேற்கொண்ட குழப்பங்களும், திரிவுபடுத்தல்களும் - தமிழரின் ஒடுக்குமுறைகளுக்கெதிரான போராட்டத்திற்கு மிகப் பாரியளவில் பாதிப்புக்களை ஏற்படுத்தியதை, தமிழினம் என்றும் மறந்துவிடமுடியாது.

காலங்காலமாக - சிங்கள அரசாங்கங்களுக்கு வால் பிடித்து, தமிழினத்தைக் காட்டிக் கொடுத்துவந்த எட்டப்பர்களான தமிழ்த் தலைவர்கள் சிலரின் வழியில், கதிர்காமரும் தவிர்க்கமுடியாதவாறு உறுதியான இடத்தைப் பிடித்துவிட்டவரே என்பதில் இருவேறு கருத்துக்கள் இருக்கமுடியாது.

தமிழினத்தின் பாதுகாவலர்களென, களத்தில் நின்று போராடிய விடுதலைப் புலிகள் தொடர்பாக உண்மைக்கு மாறான தகவல்களை வழங்கியும், தனது 'ராஜதந்திர புத்தியை' - தனது இனத்திற்கெதிராகவே அடகுவைத்தும், கதிர்காமர் மேற்கொண்ட செயல்கள் -

இன்றுவரை, சர்வதேச அரங்கில், பல தப்பபிப்பிராயங்களையும், மாறுபட்ட கருத்துக்களையும் வலுவாக்க் காலூன்றச் செய்தன எனக் கூறினால், அது மிகையில்லை என்றே சொல்லலாம்.

இப்படியாக, தமிழினத்திற்குக் குறிப்பிடத்தக்க துரோகமிழைத்த அவர் - அண்மைக்காலமாகத் தனது 'சேவையை' - தனது 'குயுக்தி'யின் வடிவமாக சர்வதேச அரங்கிலும், மிகக் குறிப்பாக தென்னிலங்கையிலும் கட்டவிழ்த்து வருகின்றார்.

சமாதானப் பேச்சுக்கள், நோர்வேத் தரப்பின் அனுசரணையுடன் ஆரம்பிக்கப்பட்டதன் பின்னர் - ஜனாதிபதியின் நெருங்கிய ஆலோசகராக இருந்தும், அவரது சார்பில் இனப்பிரச்சினைக்கான வழிமுறைகளைக் கையாள்பவராகவும் பணியாற்றும் லக்ஷ்மன் கதிர்காமர் -

இதுவரை - விடுதலைப் புலிகளைப் பற்றிக் கூறியவற்றுக்கு மாறாக - அவர்களது பலத்தைப் பற்றிப் பேசுபவராகவும், விடுதலைப் புலிகளின் தலைமைத்துவத்தின் ஆற்றலை சிலாகிப்பவராகவும் சில சந்தர்ப்பங்களில் பேசியிருக்கிறார்.

அண்மையில் வெளியான 'திவயின' பத்திரிகையில் கூட- இவரது செவ்வி, அவ்விதமே வெளியாகியிருந்தது.

அதில் - 'தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மிகவும் திறமைவாய்ந்த போர்த தலைவன், இந்த யுகத்தில் வாழும் மிகச்சிறந்த கட்டளை அதிகாரி. அவரிடம் கடற்படை இருக்கிறது. கப்பல் சேவைகளையும் அவர் நடத்துகிறார்' எனப் புகழ்ந்து கூறுகிறார் கதிர்காமர்.

இப்படிக் கதிர்காமர் கூறியிருப்பது நூறு சதவீதமான உண்மை என்பதை அனைவருமே நன்கறிந்த போதும்- கதிர்காமர் ஏன் இவ்வாறு கூறமுற்படுகின்றார் என்பதே கவனத்திற்கொள்ளப்பட வேண்டியதாகிறது.

கதிர்காமர் சொல்லித்தான் விடுதலைப்புலிகளின் தலைவரின் திறமையும், விவேகமும், துணிச்சலும் உலகிற்குத் தெரியவேண்டியதில்லை. அப்படியானால் - கதிர்காமர் இந்தளவு நாள்வரை இல்லாது, இப்படிக் கூறுவதன் உண்மையான அர்த்தம் என்ன என்பதிலேயே அவரது வேடம் கலைவதாகின்றது.

விடுதலைப் புலிகளின் பலம் பற்றி குறிப்பிடும் கதிர்காமர் - அந்தப் பலத்தைச் சிங்கள மக்கள், தமக்குரிய ஓர் அச்சுறுத்தலாக நோக்க வேண்டுமென்பதை வழிப்படுத்தவே முயல்வதுதான் இங்குள்ள முக்கியமான அம்சமாகும்.

விடுதலைப்புலிகளின் பலம் - தமிழினத்தின் பலம், தமிழரைக் காக்கும் சக்தி என்பதை விடுத்து - சிங்களவருக்காகக் கவலைப்படும் கதிர்காமர், இங்குதான் தனது சிங்கள விசுவாசத்தை மீளவும் மிகவும் நுண்மையாக வெளிப்படுத்துவதோடு, அமைதியையும் வேரறுக்கும் கைங்கரியத்தை ஆற்ற முயற்சிக்கின்றார்.

விடுதலைப் புலிகளின் பலத்தைப் பற்றிய யதார்த்தம் மூலமாக - சிங்கள மக்களிடமிருந்து நியாயமான தீர்வொன்றை உருவாக்குவதற்கான மனோநிலையைத் தோற்றுவிக்க உதவுவதைத் தவிர்த்து - புலிகளின் பலம் பற்றிய பதற்றத்தையும், அச்சத்தையும் சிங்கள மக்களிடையே தோற்றவித்து - அதனை அச்சுறுத்தலான அம்சமாக்கவே கதிர்காமர் முனைகின்றார்.

இது, கதிர்காமர் இன்னமும் மாறவில்லை என்பதோடு- அவர், தமிழினத்தைக் கருவறுக்க முயலும் தனது நிலையை இன்னமும் தொடர்கின்றார் என்பதையும் காட்டி நிற்கிறது.

# துணிச்சலான முடிவை எடுப்பதன் மூலமே அரசாங்கம் பேச்சுவார்த்தையை தொடர முடியும்

## சுரேஷ் பிரேமச்சந்திரன் அறிக்கை

(யாழ்ப்பாணம்)

அடுத்த சில நாட்களில் - அரசு சில துணிச்சலான முடிவுகளை எடுத்து அமுல்படுத்துவதன் மூலமே, பேச்சுவார்த்தையைக் காப்பாற்றி அதனைத் தொடரமுடியும்.

இவ்வாறு, ஈழமக்கள் புரட்சிகர விடுதலை முன்னணியின் செயலாளர் நாயகம் சுரேஷ் பிரேமச்சந்திரன் வெளியிட்டுள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

அந்த அறிக்கையில் மேலும் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது,

அரசாங்கத்துக்கும், தமிழீழ விடுதலைப்புலிகள் இயக்கத்துக்கும் இடையில் நடைபெற்ற ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தையில் ஏற்றுக்கொண்ட முடிவுகளை, இதுவரை அரசாங்கம் முழுமையாக நடைமுறைப்படுத்தவில்லை. இவற்றை நடைமுறைப்படுத்த அரசுக்குக் கால அவகாசம் கொடுக்கும் வகையிலும், அதற்கான அழுத்தத்தை ஏற்படுத்தும் வகையிலும், தமிழீழ விடுதலைப்புலிகள் பேச்சுவார்த்தையில் இருந்து தற்காலிகமாக ஒதுங்கியிருப்பதாக அறிவித்துள்ளார்கள்.

ஜப்பானின் தலைநகரான ரோக்கியோவில் நடக்க இருக்கும் உதவி வழங்கும் நாடுகளின் கூட்டத்தில் - அரசு, புலிகள ஆகிய இரு தரப்புகளும் கலந்து கொள்ளாவிடில், இலங்கையின் அபிவிருத்திக்குக் கிடைக்க வேண்டிய பெருந்தொகைப் பணம் கிடைக்காமல் போகலாம்; இல்லையேல், கொடுக்க இருக்கும் நிதியின் அளவு மிகவும் குறைவடையலாம்.

இலங்கைக்கு நிதியுதவி அளிப்பதற்கு தொடர்ச்சியான யுத்தநிறுத்தத்தையும், சமாதானப் பேச்சுவார்த்தையையும் ஒரு முன் நிபந்தனையாக சர்வதேச சமூகம் கொண்டிருப்பதால், தமிழீழ விடுதலைப்புலிகள் இல்லாத ரோக்கியோ மாநாட்டில் இலங்கை அரசு எதிர்பார்த்த நிதி உதவி கிடைக்குமா என்பது கேள்விக்குரியதே.

கடந்த ஆறு சுற்றுப் பேச்சுவார்த்தைகளில், ஏற்றுக்கொள்ளப்பட்ட பல விடயங்கள் நடைமுறைப்படுத்தப்படவில்லை என்பதை அரசும், பிரதமரும் ஏற்றுக்கொண்டிருக்கின்றனர். அவர்கள் ஏற்றுக்கொண்டது உண்மை எனும் பட்சத்தில், இவற்றை நடைமுறைப்படுத்த அரசாங்கம் உடனடி நடவடிக்கை எடுப்பதன் மூலமே, மீளவும் நம்பிக்கையை உருவாக்கவும் பேச்சுவார்த்தையை ஆரம்பிக்கவும் முடியும்.

இதில் முக்கியமாக இடம்பெயர்ந்த மக்களின் மீள்குடியேற்றம், புனர்நிர்மாண வேலைகளுக்கான சிறானின் நடவடிக்கைகள், அதற்கு உதவி செய்வதற்கான வட - கிழக்கு அபிவிருத்தி நிதியம் போன்றவை செயற்படாமல் இருப்பதானது முக்கியமான பிரச்சினைகளாக இருப்பதுடன், இலங்கைக்கு கிடைக்க இருக்கும் நிதி உதவியில் எவ்வளவு தொகையை, யுத்தத்தால் அழிந்துபோன வடக்கு - கிழக்கிற்கு ஒதுக்குவது என்பதிலும் அரசு முடிவெடுக்கவில்லை எனத் தோன்றுகிறது.

இதைத்தவிர, யாழ்.மாவட்டத்தில் இன்னமும் நடைமுறையில் இருக்கும் மட்டுப்படுத்தப்பட்ட மீன்பிடித்தொழிலும், மிக அதிகளவிலான இராணுவப் பிரசன்னங்களும், இயல்பு வாழ்க்கையை மீள உருவாக்குவது என்ற அரச கோட்பாடுகளுக்கு முரணாகவே இருக்கின்றது.

இந்நிலையில் அரசாங்கம், சதீஷ் நம்பியார் போன்ற இராணுவ ஜெனரல்களையும், கடற்படை அதிகாரிகளையும் அழைத்து, மீள்குடியேற்றம் பற்றியும், படைக்குறைப்புப் பற்றியும் ஆலோசித்துக்கொண்டிருப்பது அர்த்தமற்றதாகும்.

ஏனெனில், மக்களின் மீள்குடியேற்றம் என்பது, அரசியல் மனிதாபிமானப் பிரச்சினையே தவிர, இராணுவப் பிரச்சினை அல்ல என்பதை, பிரதமரும் அரசாங்கமும் புரிந்துகொள்ள வேண்டும். இதற்கு இராணுவப் பிரச்சினை என்ற வடிவத்தைக் கொடுக்கும் வரை, மீள்குடியேற்றம் என்பது மிகவும் சிக்கலான ஒரு விடயமாகவே அமையும் என்பதுடன், பேச்சுவார்த்தை நிரந்தரமாகவே முறிந்துபோகக் காரணமாகிவிடும் என்பதையும் கவனத்திலெடுக்கவேண்டும்.

பாதுகாப்பு அமைச்சர் திலக் மாரப்பனவின், கடந்த 8 ஆம் திகதிய பத்திரிகையாளர் மாநாட்டில், யாழ்.குடாநாட்டில் இருக்கும் 152 படைமுகாம்களை 88 ஆகக் குறைக்கவுள்ளதாகவும், பலாலியைச் சுற்றிவரவுள்ள பாதுகாப்பு எல்லைகளைக் குறைக்கவுள்ளதாகவும் கூறியிருந்தார்.

இவை, வெறும் பத்திரிகை அறிக்கைகளாக இல்லாமல், இவற்றை நடைமுறைப்படுத்துவதன் மூலமே, அரசின் நம்பகத்தன்மையையும் வெளிக்காட்ட முடியும். இல்லையேல், இதுவும் ஆறுசுற்றுப் பேச்சுவார்த்தையில் எடுத்த முடிவுகள் போன்றதாகவே போய்விடும். எனவே, அதியுயர் பாதுகாப்பு வலயமோ, இல்லையோ, மக்கள் தமது சொந்த வீடுகளில் சென்று மீள் குடியேறுவதற்கான அனைத்து நடவடிக்கைகளையும் அரசு மேற்கொள்ளவேண்டும்.

இதேபோல், வடக்கு - கிழக்கு அபிவிருத்தி நிதியத்தையும், உடனடியாக செயற்பட வைப்பதற்கான நடவடிக்கைகளை, அரசாங்கம் மேற்கொள்வதன் மூலம் சிரான் அமைப்பினூடாக அபிவிருத்தி நடவடிக்கைகளை ஆரம்பிக்க முடியும். விடுதலைப் புலிகளோ, தமிழ், சிங்கள, முஸ்லிம் மக்களோ, யாரும் யுத்தத்தை விரும்பவில்லை என்பது உண்மை.

ஆனால், அரசுடனான எமது கடந்காலப் பேச்சுவார்த்தைகளானது, மிகவும் கசப்பானதும், தோல்விகளைக் கொண்டதும், ஏமாற்றப்பட்டதுமாகும் என்பதை, சர்வதேச சமூகம் புரிந்து கொள்ளவேண்டும். எனவே, தமிழீழ விடுதலைப்புலிகளின் முன்னெச்சரிக்கையான போக்கையும் புரிந்து கொள்ளமுடியும்.

எனவே, அடுத்த ஒரு சில நாட்களுக்குள், அரசு சில துணிச்சலான முடிவுகளை எடுத்து, அமுல்படுத்துவதன் மூலமே, பேச்சுவார்த்தையைக் காப்பாற்றி அதனைத் தொடர முடியும்.

தொடர்ச்சியான யுத்தநிறுத்தத்துக்கும், இலங்கையின் பொருளாதார வளர்ச்சிக்கும், வடக்கு - கிழக்கின் புனர்நிர்மாணப் பணிகளுக்கும், ரோக்கியோ மாநாடும் சர்வதேச சமூகத்தின் உதவிகளும் முக்கியம். பிரச்சினைகளுக்கு, இறுதியானதும் நிரந்தரமானதுமான தீர்வைக் காணும் பேச்சுவார்த்தை, முறிவடையாமல் செல்லவேண்டும் என்பது, மக்களது எதிர்பார்ப்பாகும். இவற்றை புரிந்துகொண்டு, பிரதமர் உடனடி நடவடிக்கையில் இறங்க வேண்டும் என்பதே, இன்றைய அவசியத் தேவையாகும் எனக் குறிப்பிடபபட்டுள்ளது.

# ஐஸ் தொழிற்சாலை அமைக்க அரசாங்கம் காணி ஒதுக்கீடு

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில், ஐஸ் தொழிற்சாலை ஒன்று நிறுவப்படவுள்ளது. இதற்கான காணியை, உதவி அரசாங்க அதிபர் ஒதுக்கிக் கொடுத்துள்ளார்.

மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவிலுள்ள - மணற்காடு தொடக்கம் சுண்டிக்குளம் வரையிலான பகுதி - கடற்கரைப் பிரதேசமாகும். இங்கு வாழும் மக்கள் கடற் தொழிலையே பிரதான தொழிலாக மேற்கொண்டுள்ளனர்.

இவர்கள் பிடிக்கும் மீன்களைப் பதப்படுத்தி, கொழும்பிற்கு அனுப்புவதற்கு, ஐஸ் இன்றியமையாதது. இதனால், ஐஸ் தொழிற்சாலை இப்பகுதியில் அமைக்கப்படவேண்டியது மிகமுக் கியமானதாகும்.

கடற்தொழிலாளர்களின் வேண்டுகோளுக்கு இணங்கவே, இங்கு ஐஸ் தொழிற்சாலை நிறுவப்படவுள்ளது. இதற்காக, 2 கோடி ரூபா நிதி ஒதுக்கப்பட்டுள்ளதாகத் தெரியவருகின்றது. 1990 ஆம் ஆண்டுக்கு முன், மருதங்கேணியில் ஒரு ஐஸ் தொழிற்சாலை இயங்கிவந்தது குறிப்பிடத்தக்கது. (17)

# ஜூன் மாதம் நடமாடும் வைத்தியசேவை மருதங்கேணியில் ஆரம்பிக்கப்படும்

## யு.என்.எச்.சி.ஆர் உதவியுடன் செஞ்சிலுவைச் சங்கம் செயற்படுத்தும்

வடமராட்சி கிழக்கு, மருதங்கேணி உதவி அரசாங்க அதிபர் பிரிவில், யு.என்.எச்.சி.ஆர் உதவியுடன் நடமாடும் வைத்திய சேவை ஒன்று, ஜூன் முதலாம் திகதி ஆரம்பிக்கப்படவுள்ளது.

யு.என்.எச்.சி.ஆரின் உதவியுடன், இலங்கைச் செஞ்சிலுவைச் சங்கம் இவ்வைத்திய சேவையை நடத்தவுள்ளது. மாமுனை, மருதங்கேணி, கட்டைக்காடு ஆகிய மூன்று கிராமங்கள் தெரிவு செய்யப்பட்டு, ஒவ்வொரு கிராமத்திலும், வாரத்தில் இரண்டு நாட்கள் வீதம் இந்த வைத்தியசேவை நடைபெறும். இதற்கான கட்டட வசதிகளை, மருதங்கேணி பிரதேச செயலகம் அமைத்துக் கொடுத்துள்ளது.

இந்த நடமாடும் வைத்திய சேவையில், சகல பிரிவுகளும் இயங்குமெனத் தெரிவிக்கப்பட்டுள்ளது. சுகாதாரத் திணைக்களத்தினால், வாரத்தில் இரண்டு நாட்கள் நடாத்தப்பட்டு வந்த வைத்திய சேவை, மே முதலாம் திகதியுடன் நிறுத்தப்பட்டுள்ளது. இதனால், கர்ப்பிணித்தாய்மார் மற்றும் அவசர சிகிச்சை தேவைப்படும் நோயாளிகள், பெரிதும் பாதிக்கப்பட்டுள்ளனர். இதனையடுத்து, சுகாதாரத் திணைக்களத்தினால் நடாத்தப்பட்டு வந்த சேவையை மீண்டும் நடத்துமாறு, மீளக்குடியமர்ந்த மக்கள் சார்பில் கோரிக்கை விடப்பட்டுள்ளது.

இதேவேளை, ஆழியவளையில் இயங்கும் திலீபன் மருத்துவமனை, மீளக் குடியமர்ந்த நான்காயிரம் மக்களுக்குப் பெரும் சேவையாற்றி வருகிறது என்பது குறிப்பிடத்தக்கது.

அத்துடன், மருதங்கேணி கிராமிய வைத்தியசாலையின் புனரமைப்பு வேலைகள், மிகத்துரிதமாக நடைபெற்று வருகின்றது எனவும், இப்பணிகள் விரைவில் பூர்த்தியாகுமெனவும் தெரிவிக்கப்படுகிறது. (17)

# வலி. வடக்கு மக்கள் போராட்டத்துக்கு கடற்தொழிலாளர் சங்க சமாசம் ஆதரவு

வலி. வடக்கு மக்களின் மீள்குடியமர்வை வலியுறுத்தி, நாளை நடைபெறவுள்ள மறியற்போராட்டத்தில் இணைந்து கொள்ளுமாறு, வலிகாமம் வடக்கு - பிரதேச செயலர் பிரிவு கடற்றொழிலாளர் கூட்டுறவுச் சங்கங்களின் சமாசம் அழைப்பு விடுத்துள்ளது, சேந்தான்குளம், காங்கேசன்துறை, ஊறணி, மயிலிட்டி, பலாலி, வளலாய் ஆகிய இடங்களிலிருந்து இடம் பெயர்ந்த மக்கள், இன்னமும் மீளக்குடியமரமுடியாத நிலையே உள்ளது. வலி. வடக்கு மக்களின் இந்த நிலையை, சம்பந்தப்பட்ட தரப்பினருக்கும் வெளியுலகிற்கும் எடுத்துக்காட்டும் வகையில், யாழ். கச்சேரிக்கு முன்பாக நடைபெறும் மறியல் போராட்டத்தில், சகல கடற்றொழில்ளர்களையும் இணைந்து கொள்ளுமாறு கேட்டுக்கொள்ளப்பட்டுள்ளது.

# பிரபாகரன் மிகச் சிறந்த போர்த் தலைவர்; இந்த யுகத்தின் சிறந்த கட்டளை அதிகாரி!

**முன்னாள் அமைச்சரும், ஜனாதிபதி சந்திரிகா குமாரதுங்கவின் ஆலோசகராக இருந்துவருபவருமான நாடாளுமன்ற உறுப்பினர் லக்ஷ்மன் கதிர்காமர் "திவயின" வார இதழுக்கு அளித்த பேட்டியின் தொகுப்பு இது.**



1956 ஆம் ஆண்டு எஸ்.டபிள்யு.ஆர்.டி.பண்டாரநாயக்க ஏற்படுத்திய சிங்களம் மட்டுமே சட்டம்தான், இன்றைய இனமுறுகலுக்கு முழுமையான காரணமாகும்.

அதேநேரம், இலங்கையின் சுதந்திரத்தின் பின்னர் சிறுபான்மையினர் தவறான வழியில் இட்டுச்செல்லப்பட்டதும், தமிழ் அரசியல்வாதிகளிடம் இருந்த ஆணவமும் இதற்கான இன்னொரு காரணமாகும்.

1950 ஆம் ஆண்டு சேர். ஜோன் கொத்தலாவல 24 மணித்தியாலங்களுக்குள் சிங்கள மொழியை நடைமுறைப்படுத்த வேண்டும் எனக்கூறியது, இனப்பிரச்சினைக்கான ஆரம்பம் எனலாம். சோல்பரி ஆட்சியமைப்பின் போதும் சிறுபான்மையினருக்கு இன்றைய நிலைமை காணப்பட்டது. 1930 ஆம் ஆண்டு காலப்பகுதியிலும் தமிழர்களுக்குப் பிரச்சினை இருந்ததன் காரணமாகவே ஜி.ஜி.பொன்னம்பலம் ஐம்பதுக்கு ஐம்பது வீத உரிமையைக் கேட்டார். அன்று பெரும்பான்மையினர் இனப்பிரச்சினையைக் கண்ணிவெடியைப் போல

கருதி -

1950 ஆம் ஆண்டு காலப்பகுதியில் செல்வநாயகம் மற்றும் டட்லி சேனாநாயக்க ஆகியோருக்கு இடையில் அனைத்துக் கட்சிகளையும் இணைத்து ஆட்சியை ஏற்படுத்துவது என்ற எண்ணம் இருந்தது.

இதற்குப் பின்னர் வந்த காலப்பகுதியிலேயே தமிழ்க்கட்சிகள், தமிழீழ விடுதலைப் புலிகள் மற்றும் தமிழ் ஆயுதக் குழுக்கள் உருவாகின.

தென்னிந்தியாவுக்கும், இலங்கைக்கும் முன்னர் நெருங்கிய தொடர்புகள் இல்லாத போதும், 1983 ஆம் ஆண்டுக்குப் பின்னர் இலங்கையிலிருந்து ஆயிரக்கணக்கானோர் அங்கு சென்றதன் காரணமாகவே, தென்னிந்தியாவின் தலையீடு இலங்கையில் தீவிரமாக ஏற்பட்டது.

இதேவேளை - தமிழர்கள் சர்வதேச நாடுகளுக்குச் சென்றதன் காரணமாகவே இலங்கையின் இனப்பிரச்சினைக்கு மூன்றாம் தரப்பு மத்தியஸ்தம் தேவைப்பட்டது.

இலங்கையின் இனப்பிரச்சினைத் தீர்வுக்காக மூன்றாம் தரப்பாகச் செயற்பட 16 நாடுகள் இணக்கம் தெரிவித்தன. அமெரிக்கா, கனடா, பிரான்ஸ், பிரித்தானியா, ஜேர்மனி, நோர்வே, ஹோலந்து, இத்தாலி, சுவீடன், அவுஸ்திரேலியா, தென்னாபிரிக்கா மற்றும் பொது நலவாய நாடுகளே அவையாகும்.

இதில் சில பெரிய நாடுகளாக இருந்தன. எனவே, அவை எமது நாட்டுப் பிரச்சினைக்கு உதவமாட்டாது எனக் கருதினோம். மேலும் சில நாடுகள் வேறொரு நாட்டின் ஆதிக்கத்துக்குள் இருப்பவையாகும்.

இப்போது ஆட்சியில் உள்ள ஐக்கிய தேசிய முன்னணி சமாதான முயற்சிகளை மேற்கொண்டுள்ளது. எனினும், இன்று அந்த முன்னணி மேற்கொண்டு வரும் சமாதான நகர்வுகள் ஒழுங்கமைப்போடு செயற்படுத்தப்

படவில்லை. இதனை எமது பொதுஜன ஐக்கிய முன்னணி மேற்கொண்டிருக்குமானால் சரியான வழியில் சென்றிருக்கமுடியும்.

ஜனாதிபதி சந்திரிகா பண்டாரநாயக்க குமாரதுங்காவை நாட்டின் தலைவியாக ஐக்கிய தேசிய முன்னணி மதிக்கவில்லை. ஐக்கிய தேசிய முன்னணி -தமிழீழ விடுதலைப் புலிகளுடன் செய்து கொண்ட புரிந்துணர்வு உடன்படிக்கை, பிரச்சினைக்குரிய ஒன்றாகக் காணப்படுகின்றது.

கடற்பரப்பைப் பாதுகாக்க வேண்டிய கடமை அரசாங்கத்திடம் இருக்கும்போது, அதில் பிரவேசிக்கும் ஆயுதக்குழு மீது ஆயுதப் படையினால் தாக்குதல் நடத்தமுடியாது என புரிந்துணர்வு உடன்படிக்கையில் கூறப்பட்டிருப்பது பாரிய பிரச்சினையை ஏற்படுத்தியுள்ளது.

இத்தகைய நிலைமை ஒன்றின் கீழேயே நோர்வேயை மூன்றாம் தரப்புக்காக நாம் தெரிவு செய்தோம். தமிழீழ விடுதலைப் புலிகளும்- நோர்வே, தென்னாபிரிக்கா மற்றும் கனடா ஆகிய நாடுகளின் பெயர்களை மூன்றாம் தரப்புக்காகப் பிரேரித்தமை, நோர்வே - பலஸ்தீனத்திலும், கௌத்தமாலாவிலும் பிரச்சினைத் தீர்வுகளுக்கு மத்தியஸ்தம் வகித்தநாடாகும். அதேநேரம், இலங்கைக்கும் -அந்த நாடு நட்பு ரீதியானது என்பதால், அதனை மூன்றாம் தரப்பாக ஏற்றுக்கொண்டோம். எனினும், தற்சமயம் நோர்வே- இலங்கையில் தேவையற்ற தலையீட்டை மேற்கொண்டு வருகிறது. நோர்வேயை சமாதானத்துக்கு உதவிசெய்யவே அழைத்தோம். பின்னர் அவர்கள் மத்தியஸ்த நிலைக்கு மாறினர்.

ஐக்கிய தேசிய முன்னணி முன்கொண்டு செல்லும் வேலைத்திட்டம் எமது வேலைத்திட்டத்தின் அடிப்படையிலேயே உருவாக்கப்பட்டதாகும். அதியுயர் பாதுகாப்பு வலயங்களை அகற்றுவது தொடர்பில் அரசாங்கம்

மிகவும் கவனமான அணுகுமுறையைக் கடைப்பிடிக்கவேண்டும்.

தமிழீழ விடுதலைப் புலிகளின் தலைவர் வேலுப்பிள்ளை பிரபாகரன் மிகவும் திறமை வாய்ந்த போர்த் தலைவன், இந்த யுகத்தில் வாழும் மிகச்சிறந்த கட்டளை அதிகாரியாவார்.

அவரிடம் கடற்படை இருக்கிறது. கப்பல் சேவையை அவர் நடத்துகிறார். இத்தனைக்கும் மத்தியில் கஷ்டத்தில் இருக்கும் தமிழர்களுக்கு- வேலுப்பிள்ளை பிரபாகரன் சூரனாகவே காட்சியளிக்கிறார். தமிழீழ விடுதலைப் புலிகள் முதலில் தனியான ராஜ்ஜி



கதிர்காமர்

யத்தைக் கோரினர். தற்சமயம் சமஷ்டியை ஏற்றுக்கொள்வதாக அவர்கள் கூறியுள்ளனர்.

சமஷ்டி என்றாலும் அவர்கள் அதிலிருந்து கருத்திற்கொள்வது தனியான ராஜ்ஜியமே ஆகும். யுத்தம் எப்போது தொடங்கும் என எனக்குத் தெரியாது. ஆனால், அவர்கள் (தமிழீழ விடுதலைப் புலிகள்) எப்போதுமே அதற்குத் தயாராகவே உள்ளனர்.

**சிங்களத்தில் - அனுர சொலமன்ஸ்**
**தமிழில் - இந்திரஜித்**

# சமாதானம் எனப்படுவது ஒரு அம்புலிமாமாக் கதையா?



யசுசி அகாஷி

முகமாலைச் சோதனைச்சாவடியில் அண்மையில் நடந்த சம்பவம் இது. வழமைபோல யாழ்ப்பாணத்துக்குப் போன ஒரு அரச அலுவலரை இராணுவப் புலனாய்வுப்பிரிவைச் சேர்ந்த ஒருவர் மறித்துக் கதைத்திருக்கிறார். யுத்த நிறுத்த காலத்துக்குரிய சிநேகபூர்வமான ஒரு உரையாடல் அது.

உரையாடலின் ஒரு கட்டத்தில் அந்தப் புலனாய்வுக்காரர் சொன்னாராம்..... "இதோ பாருங்கள் ஒவ்வொருநாளும் காலையில் இந்தச சோதனைச்சாவடியை நாங்கள் நினைத தாலும் திறக்கமுடியாது. புலிகள் நினைத்தாலும் திறக்கமுடியாது. அந்த ஐ.சி.ஆர்.சி. வெள்ளைக்காரர் வந்த பின்புதான் நாங்கள் இருவரும் இந்தப் பாதையைத் திறக்கமுடியும்... ஒரு வெளியாள் வந்து திறக்கும்வரை நாங்கள் இந்தப் பாதையைப் பாவிப்பதற்காகக் காத்திருக்க வேண்டியிருக்கிறது..." என்று.

உண்மைதான். ஐ.சி.ஆர்.சி. வந்து சூனியப்

## நிலாந்தன்

பிரதேசத்தைப் பொறுப்பேற்கும்வரை யாரும் அந்த வழியால் பயணம் செய்யமுடியாது. யார் இதற்குக் காரணம்? ஐ.சி.ஆர்.சியும், அகாஷியும், நோர்வேயும் வந்து விலக்குப் பிடிக்கும் ஒரு நிலைக்கு நாட்டை இட்டுச் சென்றது யார்? இதற்கெல்லாம் காரணம் யுத்தம்தான் என்று அந்தப் புலனாய்வுக்காரர் மொட்டையாகக் கூறக்கூடும். ஆனால், யுத்தம் ஒரு விளைவு மட்டுமே. அது ஒரு காரணம் அல்ல. காரணம் என்னவென்றால்- முகமாலையில் துப்பாக்கியோடு நிற்பதற்குத் தனக்கு உரிமை இருக்கிறது என்று அந்தச் சிப்பாய் நினைக்கிறாரே அதுதான். அந்த இடத்தில் நின்று தமிழர்களை மறிக்கவும், சோதிக்கவும், விசாரிக்கவும் தனக்கு உரிமை உண்டு என்று அந்தச சிப்பாய் நினைக்கிறாரே, அந்த நினைப புத்தான் காரணம்.

அவர் தமிழர்களை மறிக்கும்போது, சாதாரண தமிழர்கள் அவரை ஊதாசீனம் செய்துவிட்டுப்போகமுடியாத ஒரு நிலையிருக்கிறதே அதுதான் காரணம். யாழ்ப்பாணத்தைப் பிடித்து வைத்திருப்பதற்குத் தமக்கு உரிமையும், நியாயமும், பலமும் உண்டு என்று சுமார் 40 ஆயிரம் துருப்புக்கள் நம்புகின்றார்களே அதுதான் காரணம்.

உயர்பாதுகாப்பு வலயங்களை இடம்மாற்றுவது என்றாலேயே சிங்கள மீடியாக்களுக்கே இத்துணை வலிக்கிறதே அதுதான் காரணம். இந்தக் காரணங்கள் உள்ளவரையும் இவற்

றின் விளைவாக வெடித்த யுத்தமும் இருக்கும். அகாஷியும், நோர்வேயும், ஐ.சி.ஆர்.சியும் வந்து எமது தலைவிதியை எழுதும் நிலைமைகள் தொடர்ந்தும் இருக்கும். யப்பானில் நடந்த ஆறாங்கட்டப் பேச்சுக்களின் போது, அங்கு சென்றிருந்த மீடியாக்காரர்கள் கூறினார்கள்....... அகாஷி ஒரு கனவான் போல நடந்துகொண்டாலும்கூட, அவருடைய தொனியிலும், நடை, உடை, பாவனைகளிலும் ஒரு வித எஜமான்தனம் எப்பொழுதும் இருக்கும் என்று. இது சாத்தியந்தான். சிங்களவர் - தமிழர்களை நாட்டாண்மை செய்யவேண்டும் என்று ஆசைப்படும்வரை- அகாஷியும், ஆர்மிரேஜ"ம் இச்சிறுதீவின் எஜமான்கள்போல நடந்துகொள்வது தர்க்கபூர்வமானதே. கிடைக்கப்பெற்ற சில தகவல்களின்படி, அகாஷியை ஐ.நாவின் செயலாளர் நாயகமாக்கும் ஒரு விருப்பம் ஜப்பானிடம் இருப்பதாகக் கூறப்படுகின்றது. அப்படிப்பார்த்தால் இலங்கைத்

தீவின் சமாதான முயற்சிகள் வெற்றிபெறுவதென்பது அகாஷியைப் பொறுத்தவரை தனிப்பட்ட வெற்றியாகவும் அமையக்கூடும்.

வரும் செய்திகள் உண்மையாயிருந்தால், அது அவர் ஐ.நாவின் செயலாளர் நாயகமாக நியமிக்கப்படுவதற்குரிய தகுதியை, வாய்ப்புக்களை மேலும் கூட்டலாம். தவிர, ஜப்பானுக்கும் அது கொலரை உயர்த்தும் விவகாரம் தான். இரண்டாம் உலக மகாயுத்தத்தின் பின்பு தன்னை ஒரு தொழில்நுட்பப் பேரரசாக ஸ்தாபித்துக்காட்டிய ஜப்பான், இப்பொழுது அரசியல் அரங்கிலும் எதையாவது சாதிக்க விரும்புகிறது. இது இந்தப் பிராந்தியத்தில் அவர்களுடைய அந்தஸ்தை உயர்த்துவதோடு, அவர்களுடைய சந்தைப் பரப்பையும் அகட்டிவிடக்கூடியது. இதைக் கிளிநொச்சிக்கு வந்துபோன ஜப்பானியர்கள் ஒப்புக்கொண்டிருக்கிறார்கள். அதாவது, இங்கு விளையும் நெல் அவர்களுக்கு மிகவும் விருப்பமாம். அத்தோடு இங்கிருந்து வரும் கடல்படுதிரவியங்களுக்கும் அங்கே கிராக்கி அதிகமாம். அதாவது, சமாதானத்துக்குப் பதிலாக நெல்லும், மீனும், பொஸ்பேற்றும், இல்மனைற்றும்......... ஆனால், இது எல்லாம் தங்கியிருப்பது புலிகளின்

அடுத்தகட்ட நகர்விற்தான். கிளிநொச்சிக்கு வந்த அகாஷிக்கு- புலிகள் நினைவுப்பரிசு ஒன்றைக் கொடுத்தார்கள். அதேசமயம், தமது நிலைப்பாட்டில் நெகிழாத போக்கொன்றையும் காட்டியிருக்கிறார்கள். சந்திப்பு முடிந்துபோகும் போது, அகாஷியின் முகம் உற்சாகம் குன்றிக் காய்ந்து, வறண்டு காணப்பட்டதாகப் பத்திரிகையாளர்கள் கூறுகின்றார்கள். வழமையாக ஏதாவது கேள்வி கேட்டால்- நின்று, நிதானமாக, விலாவாரியாகப் பதில் கூறும் அகாஷி, அன்றைக்கு அவசர அவசரமாக சிறுபதில்களுடன் விலகிச்சென்று விட்டதாகவும் கூறப்படுகின்றது.

ரோக்கியோ மாநாட்டில் கிடைக்க விருக்கும் "வாயூறவைக்கும் டொலர்களுக்காக" புலிகள் எப்படியும் இறங்கி வந்து விடுவார்கள் என்றே கொழும்பில் பரவலாக எதிர்பார்க்கப் பட்டது. "வாயூறவைக்கும் டொலர்கள்" என்ற சொற்பிரயோகம் ஒரு கொழும்புப் பத்திரி

கையில் காணப்பட்டது. ஆனால், புலிகள் நெகிழவில்லை. வாயூறவைக்கும டொலர்களைக்காட்டி அவர்களை இதுவரை அசைக்க முடியவில்லை என்பது ஜப்பானுக்கும், நோர்வேக்கும், கொழும்புக்கும் சற்று அதிர்ச்சியூட்டும் ஒரு செய்தியே.

இனியும் வழுவழுத்த வார்த்தைகளால் கதைத்துக்கொண்டிருக்கத் தயாரில்லை என்பதைப் புலிகள் திட்டவட்டமாகக் கூறியாயிற்று. வாக்குறுதிகளின் காலம் முடிந்துவிட்டது. வாக்குறுதிகள் பெரும்பாலும் புளித்துவிட்டன. அல்லது புனிதம் இழந்துவிட்டன. சந்திரிகாவைக் காரணம் காட்டியே அரசாங்கம் பல வாக்குறுதிகளை முறித்துவிட்டது அல்லது அவற்றை அமுல்ப்படுத்தாது இழுத்தடிக்கிறது. அண்மையில் கண்காணிப்புக்குழுவின் கடற்புலிகள் பற்றிய பரிந்துரைகள்- சந்திரிகாவுக்கு ஊடாகவே பத்திரிகைகளுக்குக் கசிந்ததாக ரணிலின் நண்பர்கள் கூறுகின்றார்கள். அதைப் பத்திரிகைகளுக்குக் கசியவிட்டதன் மூலம் அது பற்றி ஒரு அரசியல்த் தீர்மானம் எடுக்கப்படுவதற்கு முன்பே அதை ஒரு விவகாரம் ஆக்கி, அதற்கெதிராகப் பொதுசன அபிப்பிராயத்தை உருவாக்கி, சந்திரிகா

நிலைமைகளை குழப்பிவிட்டதாகக் கூறப்படுகிறது. இதனால், அரசாங்கம் ஒரு கட்டத்திற்கு மேல் நகரமுடியாமல் போய்விட்டது என்றும் கூறப்படுகின்றது. ஆனால், உண்மை நிலை என்னவெனில் -கடற்புலிகளையும், கடலில் புலிகளின் கட்டுப்பாட்டுப் பிரதேசங்களையும் அங்கீகரிக்க அரசாங்கம் தயங்குகின்றது என்பதே.

சந்திரிகா சமாதானத்தைக் காட்டிக் கொடுக்கிறார் என்று கூறுவது ரணிலின் ஆட்களுக்கு ஒரு வசதியான சாட்டாகிவிட்டது. ஆனால், ரணிலும்கூட அவ்வப்போது சமாதானத்தைக் காட்டிக்கொடுத்திருப்பதாகத் தமிழரின் ஒரு பகுதியினர் பலமாக நம்புகின்றார்கள். அரசியல் அமைப்பின்படி பலவீனமானவராகக் காணப்படும் ரணில்- கொழும்பில் தன்னை ஸ்திரப்படுத்துவதற்கு ஒரு உத்தியாகச் சமாதானத்தைக் கையாளவில்லை என்று நம்புவதற்குத் தேவையான நியாயங்கள் எதையும் இதுவரை செய்யவில்லை என்றும் அவர்கள் சுட்டிக்காட்டுகின்றார்கள். முன்பு தங்களை நிலைநிறுத்த வெளிநாட்டு உதவிபெற்று யுத்தம் செய்தவர்கள், இப்பொழுதும் அந்த வெளிநாட்டு உதவியோடு தங்களை நிலைநிறுத்துவதற்காகச் சமாதானம் செய்கிறார்களா? அப்படிப்பார்த்தால் யுத்தமோ, சமாதானமோ எதுவானாலும் அவர்கள் தங்களை நிலைநிறுத்துவதற்காகப் பாவிக்கும் விவகாரங்கள்தானா? இந்த இலட்சணத்தில் ஜி.எல்.பீரிஸ் எல்லாம் சரியாகிவிடும் என்று "எல்லாம் நன்மைக்கே" பாணியில் கூறிவருவது சமாதானம் ஏதோ அம்புலிமாமாக் கதைகளில் வரும் ஒரு விவகாரம் போன்றதே என்று தமிழர்களை நம்பவைப்பதற்காகவா?

# இஸ்ரேலில் பயணிகள் பஸ் மீது தற்கொலைப்படைத் தாக்குதல்

## எண்மர் பலி; 20 பேர் வரை படுகாயம்



தாக்குதலுக்கிலக்கான பஸ்

(ரெல்அவிவ்)

ஜெருசலேமில், தற்கொலைப் படையாளி ஒருவர் நடத்திய தாக்குதலில், ஏழு பேர் கொலலப்பட்டதுடன் 20 பேர் வரை படுகாயமடைந்தனர்.

ஜெருசலேமின் சனசந்தடிமிக்க 'பிரெஞ் ஹில்' என்ற பஸ் தரிப்பிடத்திற்கு அருகே பயணிகள் பஸ் ஒன்றைக் குறிவைத்து இத்தாக்குதல் நடத்தப்பட்டிருக்கிறது.

பஸ்ஸில் பயணம் செய்த ஒருவரே, தனது உடலில் வெடிமருந்தைக் கட்டிவந்து இத்தாக்குதலை மேற்கொண்டிருக்கிறார்.

இதேவேளை - சம்பவ இடத்திற்கு விரைந்து வந்த இஸ்ரேலியப் படையினர் மீதும், இன்னுமொரு தற்கொலைத் தாக்குதல் நடத்தப்பட்டதாயினும் - இதில், சேதங்கள் ஏதும் ஏற்படவில்லை.

இத்தாக்குதல் சம்பவத்தைத் தொடர்ந்து - அமெரிக்க ஜனாதிபதி ஜோர்ஜ் டபிள்யூ.புஷ் உடனான சந்திப்புக்காக வொஷிங்ரன் புறப்பட்ட இஸ்ரேல் பிரதமர் ஏரியல் ஷரோன் தனது விஜயத்தை பிற்போட்டிருக்கிறார். இத்தாக்குதலைத் தொடர்ந்து தற்கொலைப் படையாளிகள் வந்திருப்பதாகக் கருதப்படும் மேற்குக் கரை ரமளா நகரில், இஸ்ரேலியப் படையினர் தற்காலிகமாக ஊரடங்கைப் பிறப்பித்து, தேடுதல் வேட்டையை ஆரம்பித்துள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரவு - பலஸ்தீனத்தின் புதிய பிரதமர் மஹ்மூத் அபாஸுடனான சந்திப்பை, இஸ்ரேலியப் பிரதமர் ஷரோன் நடாத்திய சில மணி நேரங்களுள் இத்தாக்குதல் நடத்தப்பட்டிருப்பது குறிப்பிடத்தக்கது.



சீனத் தலைநகர் பீக்கிங்கில், சார்ஸ் அச்சுறுத்தலால், பயணங்களின் போதும் மக்கள் முகமூடிகளை அணிந்தே சென்று வருகின்றனர். இங்கும் ஒரு ரயில் பயணி பாதுகாப்புக் கவசம் அணிந்திருக்கிறார்.

# கியூப விமானத்தை அமெரிக்காவுக்கு கடத்த முயன்றவருக்கு ஆயுள் சிறை

(ஹவானா)

கியூபாவில் கடந்த மாதம் பயணிகள் விமானமொன்றைக் கடத்த முயன்ற ஐந்து பேருக்கு - கியூப நீதிமன்றம் ஆயுட்காலச் சிறைத்தண்டனை விதித்துள்ளது.

இவர்கள் கியூபாவிலிருந்து அமெரிக்காவை நோக்கி இந்த விமானத்தைக் கடத்த முயன்றதாகத் தெரிவிக்கப்படுகின்றது.

இந்த முயற்சிக்குப் பின்னால்- கியூபாவின் சீர்த்தன்மையைக் குலைக்கும் அமெரிக்கச் சதி இருப்பதாக, கியூபாவின் ஜனாதிபதி பிடல் காஸ்ரோ கூறியிருக்கிறார்.

இதேவேளை - அண்மையில் பயணிகள் படகொன்றும் இவ்விதமாகக் கடத்தப்பட முயற்சி மேற்கொள்ளப்பட்டமையும் குறிப்பிடத்தக்கது.

இறுதியாக நடந்த விமானக் கடததல் முயற்சியில்- விமானத்திலிருந்த எட்டுப்பேர் திடீரென எழுந்து, அதே விமானத்தில் பயணம் செய்த படைவீரர் ஒருவரிடமிருந்து ஏ.கே- 47 துப்பாக்கியைப் பறித்து விமானத்தைக் கடத்த முயன்றதாக கியூபா அதிகாரிகள் தெரிவித்துள்ளனர்.

கடத்தல் முயற்சி நடைபெற்ற விமானம்







ஈராக்கில் 'ஆயுத விளையாட்டை' முடித்த அமெரிக்க ஜனாதிபதிக்கு, அமெரிக்க விளையாட்டு அணியொன்று தனது அணியின் பிரத்தியேக ரீ சேட்டை பரிசாக அன்பளிப்புச் செய்கிறது.

# ஐரோப்பிய யூனியன் அமைப்புடன் ஸ்லோவேனியாவும் இணைந்தது!



ஐரோப்பிய யூனியனுடன் இணைவதற்காக - ஸ்லோவேனிய மக்கள் தமது விருப்பத்தைத் தெரிவித்துள்ளனர்.

ஸ்லோவேனியப் பிரதமர் மிக்குலஸ் அரிண்டா இது தொடர்பாகக் கருத்துத் தெரிவிக்கையில் - ஐரோப்பிய யூனினுடன் இணைவதற்காக நடத்தப்பட்ட கருத்துக் கணிப்பு வாக்கெடுப்பில், மொத்த வாக்காளர்களில் 50 சதவீதமானோரின் வாக்குகள் கணக்கிடப்பட்ட போது - அதில் 90 சதவீதமானோர், ஐரோப்பிய யூனியனுடன் இணைவதற்கு விருப்பம் தெரிவித்திருப்பதாகக் குறிப்பிட்டார்.

இந்த வருடத்தில் - மோல்ட்டா, ஸ்லோவேனியா, ஹங்கேரி, லித்துவேனியா ஆகிய நாடுகளில் நடத்தப்பட்ட கருத்துக் கணிப்புக்களில்- இந்நாடுகள், ஐரோப்பிய யூனியனில் இணைவதற்கு - அந்நாட்டு மக்கள் ஆதரவு தெரிவித்துள்ளமை குறிப்பிடத்தக்கது.

ஸ்லோவேனியத் தேர்தல் முடிவை வரவேற்றுள்ள ஐரோப்பிய யூனியன்- இதன்மூலம் சம உரிமைகளை அனுபவிக்கும் ஐரோப்பிய யூனியனில் ஸ்லோவேனியாவும் அங்கத்தவராகுவதாகத் தெரிவித்துள்ளது.

இதேவேளை, நடந்த கருத்துக் கணிப்பில், மொத்தமான ஸ்லோவேனிய வாக்காளர்களில் 47 முதல் 49 சதவீதத்தினரே வாக்களித்திருப்பதால் - இம்முடிவு செல்லுபடியாகுமா என்ற கேள்வியும் அரசியலமைப்புரீதியாக எழுந்துள்ளது.



பங்களாதேஷில் கிராமப்புறப் பெண்களுக்கு வழங்கப்படும் இலகு கடன் வசதிகளால் அவர்களிடையே பெரும் முன்னேற்றம் ஏற்பட்டுள்ளது. பெற்ற கடனை திரும்பிச் செலுத்த ஆயத்தமாகும் பெண்கள் இவர்கள்.

# 83ஆவது பிறந்த தினத்தை கொண்டாடினார் பாப்பரசர்



(ரோம்)

உலகக் கிறிஸ்தவர்களின் தலைவரான பாப்பரசர் ஜான் போல் தனது 83 ஆவது பிறந்த தினத்தை நேற்றுக் கொண்டாடினார்.

மிகுந்த நோய்வாய்ப்பட்டிருக்கும் அவரது இந்தப் பிறந்ததின விழாவில் - போலந்து ஜனாதிபதி அலெக்ஸாண்டர் ருவானிஸ்விஸ்கி உட்பட ஆயிரக்கணக்கான மக்கள் கலந்துகொண்டனர்.

'பர்க்கின்ஸன்' ஞாபகமறதி நோய் மற்றும் மூட்டு வாத்தால் பாதிக்கப்பட்டிருக்கும் பாப்பரசர், ஹைட்ரோலிக் சக்தியினால் இயங்கும் சக்கர நாற்காலியில் அமர்ந்தே நேற்று மக்களைச் சந்தித்தார்.

இந்த வருடத்துடன் - பாப்பரசரசராகப் பொறுப்பேற்று 25 வருடங்களை நிறைவு செய்யும், போலந்து நாட்டைச் சொந்த இடமாகக் கொண்ட பாப்பரசர் ஜான் போல், உலக வரலாற்றில் நீண்டகாலம் பாப்பரசர்களாக இருந்தவர்களில் ஒருவர் என்ற பெருமையையும் பெறுகின்றார் என்பது குறிப்பிடத்தக்கது.

## உலகவலம்

### சிறார் பாதிப்பு ஈராக்கில் தீவிரம்

ஈராக்கியச் சிறுவர்கள், தகுந்த போஷாக்கு உணவு இன்றிப் பாதிக்கப்பட்டிருக்கும் சூழலில் - அவர்களை வயிற்றோட்ட நோயும் பாதிக்கத் தொடங்கியிருக்கிறது.

ஈராக்கிற்கு விஜயம் செய்துள்ள- ஐ.நா சிறுவர் பாதுகாப்பு நிதியத்தின் தலைவர் ஹரோல் பெலாமியால் இவ்விடயம் கண்டறியப்பட்டுள்ளது.

இதேவேளை - ஈராக்கில் பாடசாலைகள் மீள ஆரம்பிக்கப்பட்டாலும் - மாணவர் வருகை இன்னமும் திருப்திகரமாவில்லை எனக் கருதப்படுகிறது.



ஈராக்கில் அழுக்கு நீர் நிறைந்த ஆறு ஒன்றில் குளித்து மகிழும் சிறார்கள் இருவர். அந்த நாட்டில் அழுக்கு நீரினால் பலவிதமான நோய்கள் பரவுவதாக கண்டறியப்பட்டுள்ளது.

நமது ஈழநாடு
The Namathu Eezhanadu
The Leading Daily of Tamils' Homeland

# மிருசுவில் பகுதியில் படையினர் மது போதையில் அடாவடித்தனம்

## பெண் மீது பலாத்கார முயற்சி

மிருசுவில் பகுதியில், மதுபோதையில் சென்ற இராணுவத்தினர்-பொதுமக்களைத் தாக்கியதுடன், சொத்துக்களையும் சேதப்படுத்தியுள்ளனர்.

நேற்றுமுன்தினம் மாலை 2 மணியளவில், மிருசுவில் கெற்பலி பகுதியில் அமைந்துள்ள மக்கள் குடியிருப்புப் பகுதியில், இந்தச் சம்பவம் இடம்பெற்றுள்ளது.

கிளாலிப் பகுதியில் உள்ள, இராணுவ முகாமைச் சேர்ந்த இரு இராணுவத்தினர் மதுபோதையில், தனித்திருந்த பெண்ணொருவருடன் தகாதமுறையில் நடக்க முற்பட்ட வேளை - அயல்வீட்டார் பிரஸ்தாப இரு இராணுவத்தினரையும் தாக்கினர். இதனையடுத்து படையினர் இருவரும் தப்பியோடிவிட்டனர்.

அதேவேளை, இவ்வாறு இன்னொரு வீட்டினுள் நுழைந்த இவர்கள், எஸ்.யோகராசா (வயது 47) என்ற குடும்பஸ்தரைத் தாக்கியுள்ளனர். இவ்வாறு இப்பகுதியில், பலர் தாக்கப்பட்டுள்ளதாக அப்பகுதி மக்கள் தெரிவித்துள்ளனர்.

படையினர் ஒரு தொகை கஞ்சாச செடிகளை வைத்திருந்ததாகவும் தெரியவருகின்றது. இப்பகுதியிலுள்ள ஏழு வீடுகளுக்குச் சென்ற இவர்கள், உடமைகள் பலவற்றைச் சேதப்படுத்தியுள்ளனர்.

சமைத்து வைக்கப்பட்டிருந்த உணவுப் பொருட்களைச் சப்பாத்துக் கால்களினால் அழித்ததுடன், கோழிக் கூடு ஒன்றை அடித்து நொருக்கி, கோழிகளையும் கொன்றுள்ளனர்.

இராணுவத்தினரின் இந்த கெடுபிடிகளினால் அச்சமடைந்த மக்கள், வீடு ஒன்றில் இரவு கூடியிருந்தனர்.

மேற்படி சம்பவம் தொடர்பாக-பாதிக்கப்பட்ட மக்கள், விடுதலைப் புலிகளின் யாழ். மாவட்ட அரசியற்துறை அலுவலகம், கண்காணிப்புக் குழுவின் யாழ். மாவட்ட அலுவலகம், மனிதஉரிமை ஆணைக்குழுவின் அலுவலகம் ஆகியவற்றில் முறையிட்டுள்ளனர்.

### ஐ.நா.அதிகாரி யாழ். வருகிறார்

(யாழ்ப்பாணம்)

முரண்பாடுகளை நீக்குவதற்கான ஐக்கிய நாடுகள் சபையின் செயற்திட்ட உயர் அதிகாரி இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்கிறார்.

மேற்படி செயற்திட்டத்தின் தெற்காசிய நாடுகளுக்குப் பொறுப்பான அதிகாரியே இன்று யாழ்ப்பாணத்துக்கு விஜயம் செய்யவுள்ளார்.

# ஆணையாளர் நியமிக்கப்படாததால் இயங்க முடியாதிருக்கும் லஞ்ச ஊழல் ஆணைக்குழு

லஞ்ச ஊழல் ஆணையாருக்கான வெற்றிடம் நிரப்பப்படாமையால், கடந்த மூன்று மாதங்களுக்கு மேலாக லஞ்ச ஆணைக்குழு இயங்க முடியாதநிலை ஏற்பட்டுள்ளது.

லஞ்ச ஆணைக்குழுவின் ஆணையாளருக்கான வெற்றிடம்-பெப்ரவரி மாதம் 22 ஆம் திகதியிலிருந்து தொடர்ந்து வெற்றிடமாகவே இருந்து வருகிறது.

இதனால் லஞ்ச ஆணைக்குழு அலுவலகத்திற்கு செய்யப்பட்ட முறைப்பாடுகள் தொடர்பான, விசாரணை மேற்கொள்ள முடியாதநிலையில் இருந்து வருகின்றது.

நிறுவனங்கள் மற்றும் பொதுமக்களால் மேற்கொள்ளப்படும் முறைப்பாடுகள் தொடர்பான, விசாரணைகளை மேற்கொள்ளமுடியாத நிலை ஏற்பட்டுள்ளதாக தெரிவிக்கப்படுகிறது. (01)

## கலைப்பீட மாணவர்களிற்கான கலந்துரையாடல்

கலைப்பீட மாணவர்களின் கலைவார நிகழ்வு தொடர்பான கலந்துரையாடல் திங்கட்கிழமை காலை 12.00 மணிக்கு கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளதால் அனைத்து கலைப்பீட மாணவர்களையும் கலந்துகொள்ளுமாறு வேண்டுகின்றோம்.

- கலைப்பீட மாணவர் ஒன்றியம்.

(353)

## ஐந்தாவது நாளாக...

சிறையிலிருந்த முருகையா சுரேந்திரன் (வயது 24) என்பவரின் நிலை மேலும் மோசமடைந்துள்ளதாகவும் தெரிவிக்கப்படுகிறது.

சிறைச்சாலையிலிருந்து, கடிதங்கள் மற்றும் பத்திரிகைகளுக்கு தகவல்களை அனுப்புவதற்கும் சிறைச்சாலை அதிகாரிகள் அனுமதி மறுத்து வருவதாகவும் தெரிவிக்கப்படுகின்றது. (01)

## புலிகளின்...

புலிகளுடன் பேச்சுக்களை நடாத்த விருப்பதாகக் கொழும்பு ஊடகங்களில் செய்திகள் வெளியாகின.

எனினும், பிந்திக் கிடைத்த தகவல்கள், விதார் ஹெல்கிசனின் வன்னிக்கான பயணம் ரத்துச் செய்யப்பட்டிருப்பதாக தெரிவித்தன.

## மீளக்குடியமர...

கிறது.

பொதுமக்களின் குடியிருப்புப் பகுதிகளில் அமைக்கப்பட்டிருக்கும் உயர் பாதுகாப்பு வலயங்களையும், இராணுவக் காவலரண்களையும் அகற்றிவிட்டு, அப்பகுதிகளில் பொதுமக்கள் மீளக்குடியமர்வதற்கு அனுமதிக்கப்பட வேண்டும் ' என்ற தமது நீண்டநாள் கோரிக்கை தொடர்பாக, அரசு எதுவித நடவடிக்கையும் எடுக்கவில்லை என்பதைக் கண்டித்தே, நாளை மறியற் போராட்டம் நடாத்தப்படவுள்ளது.

## தென்பகுதி...

நடவடிக்கைகள் மேற்கொள்ளப்பட்டு வருகின்றன.

கடந்த நான்கு தினங்களுக்கு மேலாக ஏற்பட்ட மண்சரிவு அனர்த்தங்களினால், நேற்றுக்காலை வரை நாடுமுழுவதும் 105 பேர் மரணமடைந்தனர். சுமார் 150 பேர் காணாமற்போயுள்ளனர்.

நேற்றுமுன்தினம் இரத்தினபுரி மாவட்டத்தில் ஏற்பட்ட பெரும் மண்சரிவு காரணமாக சுமார் 75 பொதுமக்கள் மரணமானதாகத் தெரிவிக்கப்படுகிறது.

இரத்தினபுரிப் பகுதியில் வெள்ளப்பெருக்கு அதிகமாகி, சுமார் 55 ஆயிரம் குடும்பங்கள் தமது இருபபிடங்களைவிட்டு இடம்பெயர்ந்துள்ளன.

அப்பகுதியில் வெள்ள நீரமட்டம் மாடிக் கட்டடங்களுக்குள்ளேயும் புகுந்துவிட்டதாகவும் அங்கிருந்து கிடைக்கும் தகவல்கள் தெரிவிக்கின்றன.

தென்பகுதியில் - காலி, மாத்தளை, களுததுறை, இரத்தினபுரி போன்ற பகுதிகளிலேயே இவ்வாறான வெள்ள, மண்சரிவு அனர்த்தங்கள் அதிகமாக நிகழ்ந்துள்ளன.

தொடர்ந்தும் கடும்மழை பெய்து கொண்டிருப்பதனால், கொழும்பு நகரின் மின்சார விநியோகம் முழுமையாக பாதிக்கப்பட்டுள்ளது. நேற்று முன்னிரவு தொடக்கம் கொழும்பு நகரம் இருளில் மூழ்கியிருப்பது குறிப்பிடத்தக்கது.

நாடு முழுவதிலும் 300 கிராமங்கள் வெள்ளப் பெருக்கினால் மோசமாகப் பாதிக்கப்பட்டுள்ளன. சுமார் இரண்டரை இலட்சம் பேர்வரை பாதிப்புக்குள்ளாகியுள்ளனர். இவர்கள் கோயில்கள், பாடசாலைகள் போன்ற இடங்களில் தங்கியுள்ளனர்.

### இந்தியாவிடம் மிலிந்த கோரிக்கை

வெள்ளம், மண்சரிவு என்பனவற்றால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு உதவுவதற்காக விரைவுப் படகுகளை தந்துதவுமாறு அமைச்சர் மிலிந்த மொறகொட இந்தியாவிடம் கோரிக்கை விடுத்துள்ளார்.

வெள்ளத்தால் பாதிக்கப்பட்டுள்ள மக்களுக்கு நிவாரணம் வழங்குவதற்கு, இந்தியா இந்த உதவிகளை உடன் வழங்க வேண்டும் என்றும் அமைச்சர் மிலிந்த மொறகொட கோரிக்கை விடுத்துள்ளார்.

போக்குவரத்துப் பிரச்சினை காரணமாகச் சேதங்களை உடனடியாக மதிப்பிட முடியாமலிருப்பதாகத் தெரிவிக்கப்படுகிறது.

மழை, மண்சரிவு, வெள்ளம் காரணமாகப் பாதிக்கப்பட்டவர்கள் தொடர்பான விவரங்களை நேற்று அதிகாலை முதல் விமானப் படையின் ஹெலிகொப்டர்கள் சேகரித்து வருகின்றன.

இராணுவம், கடற்படை, விமானப்படை ஆகியன மீட்புப் பணிகளிலும், நிவாரணப் பணிகளிலும் ஈடுபட்டு வருகின்றன.

கொலவத்தையைச் சேர்ந்த ரம்பகொட தோட்டத்தில் மட்டும் ஏற்பட்ட மண்சரிவில், 25 பேர் இறந்துள்ளனர். இவர்களில் 16 பேரின சடலங்கள் கண்டெடுக்கப்பட்டுள்ளன என்று செய்திகள் தெரிவிக்கின்றன.

MCS
324,பலாலிவீதி, யாழ்ப்பாணம் (பரமேஸ்வராச்சந்தி அருகே, மேல்மாடியில்)
இலவசக்கணனிப்பயிற்சி
ஐ.நா. அபிவிருத்தித் திட்டத்தின் கீழ் அரச நிறுவனங்களை கணனிமயப்படுத்துவதில் பெரும்பங்காற்றிய எமது நிறுவனத்தினர் விசேட கணனிப்பயிற்சித்திட்டம் ஒன்றை முன்வைத்துள்ளார்கள்
பதிவுகள் 23.05.2003 இற்கு முன் நேரில்

COMPUTER COURSES
New Batches Start on
Batch 1 :25.05.2003
Batch 2 :28.05.2003
Batch 3 :14.06.2003
at 10.00 A.M



உங்கள் முயற்சிக்கு....



இலங்கையிலும், சர்வதேச ரீதியிலும் அங்கீகாரம் பெற்ற சான்றிதழ்



Diploma in Computer Programming
Diploma in Java Programming
Diploma in Visual C Programming
Diploma in Visual Basic Programming
Diploma in Information Technology

AN INTERNATIONALLY RECOGNIZED CERTIFICATE COURSE IN COMPUTERIZED ACCOUNTING
NEXT GENERATION

ARE YOU PLANNING TO STUDY IN U.K!
ARE YOU WILLING TO GET EMPLOYMENT ABROAD!
ARE YOU ANXIOUS TO GET FOREIGN SCHOLARSHIP AND TRAINING!
IELTS
International English Language Testing System Opens the way Examination is held by British Council Colombo. Certificate is issued by the University of Cambridge, London.

Diploma in MS Office
Diploma in Internet Technology
Diploma in Hardware Technology
Diploma in Eng. Drawing & AutoCAD
Diploma in Desk Top Publishing

Adobe PageMaker, Adobe Photoshop 07, Adobe Premiere, Macromedia Flash, CorelDRAW, MS Word, MS Excel, MS Access, ORACLE 9i, Pascal

கணனிக் கல்விக்கு தனித்துவம் மிக்க IIS நிறுவனத்தில் இணைவதனூடாக கணனி உலகில நீங்கள் அங்கீகரிக்கப்படுகின்றீர்கள்.

INSTITUTE OF INFORMATICS STUDIES ( IIS )
Head Office:
IIS, 100, Clock Tower Road, Jaffna
T.P No: 021-2222831 Email: iis@sltnet.lk
Branches:
IIS, Nelliyady, Karaveddy
IIS, Main Road, Chankanai.

இப்பத்திரிகை இல.267, நாவலர் வீதி, யாழ்ப்பாணம் என்னும் முகவரியிலுள்ள நமது ஈழநாடு அச்சகத்தில் 19.05.2003 அன்று பொன்னுத்துரை குருதேவ் அவர்களால் அச்சிட்டு வெளியிடப்பட்டது.